REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK
2024 மே 7 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්
1932–2024 ANNIVERSARY
வரு. 92 இல. 108 | Tuesday 07, May, 2024 | 16 பக்கங்கள் | 50/-




வெளிநாட்டவருக்கான வீசா

## முன்னைய கட்டணத்தை அறவிட அமைச்சரவையில் தீர்மானம்

வெளிநாட்டவர் நாட்டுக்கு வரும்போது 30 நாள் விசாவுக்காக ஒருவருக்கு 50 டொலர் என்ற முன்னைய கட்டணத்தை பேணுவதற்கும், இந்தியா, சீனா, ரஷ்யா, ஜப்பான், மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேஷியா ஆகிய ஏழு நாடுகளுக்கும் இதுவரை வழங்கப்பட்ட இலவச விசா சேவையை நடைமுறைப்படுத்துவதற்கும் நேற்று (06) கூடிய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

மேலும், ஒரு வெளிநாட்டவர் நாட்டுக்குள் நுழையும் போது அவருக்குரிய விசாவை வழங்குவதற்கான முழுப் பொறுப்பையும் குடிவரவு, குடியகல்வுத் தணைக்களம் ஏற்கும் என்றும் அமைச்சவை நேற்று முடிவுசெய்துள்ளது.

## "Industry EXPO 2024" சர்வதேச கைத்தொழில் கண்காட்சி

### ஜூன் 19 முதல் 23 வரை BMICH இல்



சர்வதேச கைத்தொழில் கண்காட்சி "Industry EXPO 2024" ஜூன் 19 முதல் 23 வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்றும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இக்கண்காட்சியை ஆரம்பித்து வைப்பாரென்றும் கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரண தெரிவித்தார்.

நிலைபேறான பசுமைக் கைத்தொழில் கலாசாரத்தை ஊக்குவிப்பதற்கான

06

## தேசிய படைவீரர் நினைவு மாதம் ஜனாதிபதிக்கு கொடி அணிவிப்பு



படைவீரர் கொண்டாட்ட மாதத்தை பிரகடனப்படுத்தும் வகையில் தேசிய படைவீரர் கொடி நேற்று (06) ஜனாதிபதிக்கு அணிவிக்கப்பட்டது.

ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற ஜெனரல் நிஷாந்த மானகே இக்கொடியை ஜனாதிபதிக்கு அணிவித்தார். மூன்று தசாப்த கால யுத்தத்தின் போது நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டுக்காக தமது உயிரைத் தியாகம் செய்த படைவீரர்களை, நினைவு கூரும் வகையில் மே மாதம் 'படைவீரர் நினைவு மாதமாக' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

06

On Arrival விசா, கட்டண அறவீட்டு விவகாரம்

# அமைச்சரவை, பாராளுமன்றின் அனுமதியுடனேயே நிறைவேறியது

## அனுமதியின்றி இதனை நடைமுறைப்படுத்தியதாக கூறப்படுவதில் உண்மையில்லையென அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு



### விசா வழங்கும் முறைமையை ஆராய்வதற்காக 05 சிறப்பு நிபுணர்களைக் கொண்ட குழு சிங்கப்பூரிலிருந்து விரைவில் வருகை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமைச்சரவை,பாராளுமன்றத்தின் அனுமதியுடனேயே விசா கட்டணம் அதிகரிக்கப்பட்டதாகவும் வெளிநாட்டு நிறுவனத்துக்கு இதற்கான அனுமதி வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், அனுமதியின்றி இதனை நடைமுறைப்படுத்தியுள்ளதாக கூறப்படுவது உண்மைக்கு புறம்பானதென தெரிவித்துள்ளார்.

On Arrival விசா வசதி தொடர்பான பிரேரணை பாராளுமன்றத்தில் 2023 நவம்பர் (23) ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்துள்ள அவர், விசா கட்டண விவகாரமும் அதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களில் ஒரு பகுதியாகும் என்றும் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட

06

## 11 அபிவிருத்தி திட்டங்களை நிறைவு செய்ய நடவடிக்கை

### திறைசேரி 1,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடக்கு, கிழக்கு உட்பட பல்வேறு பகுதிகளிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட 11 அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாக நிறைவு செய்வதற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்காக திறைசேரி மூலம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகளை விரைவாக நிறைவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பஸ் தரிப்பு நிலைய நிர்மாணப் பணிகள், நிந்தவூர் கடற்கரை பூங்கா நிர்மாணிப்பு திட்டங்களும் இதில் உள்ளடங்குகின்றன. கம்பஹா, பாணந்துறை, அவிசாவளை, அளவ்வை, மினுவாங்கொட,

06

## சோமாலியாவில் மீட்ட மீனவர்கள் சில தினங்களில் இலங்கை வருவர்



சோமாலியாவில் கடத்தப்பட்டு தற்போது சீசெல்ஸ் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை கடற்றொழிலாளர்களை மீட்பதற்கான இராஜதந்திர மட்டத்திலான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் எதிர்வரும் சில நாட்களில் அவர்கள் இலங்கைக்கு வருவார்களெனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்

06

## GCE O/L பரீட்சை நேற்று ஆரம்பம் பாதுகாப்புக்காக 2,000 பொலிஸார்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை நேற்று ஆரம்பமாகியது. பரீட்சை நடவடிக்கைகளின் பாதுகாப்புக்காக 2000 பொலிஸாரை சேவையில் ஈடுபடுத்தியுள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார். நாடளாவிய ரீதியில் விசேட வேலைத் திட்டம் ஒன்றின் மூலம் பாதுகாப்பு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இப்பரீட்சை

06

சிறுபோகத்துக்கான MOP உரம்:

## மானிய நிதி விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பீடு



விவசாயிகள் மத்தியில் MOP உரப்பாவனையை ஊக்குவிக்கும் நோக்கில், இந்த ஆண்டுக்கான சிறுபோக உற்பத்திக்குரிய உரத்துக்கான மானியத் தொகையை விவசாயிகளின் கணக்கில் இன்று வைப்பீடு செய்ய விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது. கடந்த பெரும்போக உற்பத்திக்கு 30ஆயிரம் மெற்றிக் தொன் எம்.ஓ. பியின் உரம் தேவைப்பட்டது. இருந்த போதிலும் விவசாயிகள் இதில் மூன்றில் ஒரு பங்கை மாத்திரமே கொள் முதல்

06

தரமற்ற மருந்து கொள்வனவு வழக்கு

## கெஹெலிய உட்பட 8 பேருக்கு 20 வரை விளக்கமறியல் நீடிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தரமற்ற மருந்து கொள்வனவு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, முன்னாள் சுகாதார அமைச்சர்

06

## யாழ். சர்வதேச விமான நிலையம்: இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி

யாழ்ப்பாணம், பலாலி சர்வதேச விமான நிலையத்தை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணம், பலாலி சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்பட்டிருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திர குறிப்பிட்டுள்ளார். இதன்போது ஒரேயொரு முன்மொழிவு மாத்திரமே கிடைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் யாழ்ப்பாணம், பலாலி சர்வதேச விமான நிலையம் இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. விரைவில் இதற்கான யோசனை தயாரிக்கப்படவுள்ளதா கவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரூபவாஹினியின் தனித்துவ முயற்சி

## இலங்கையில் முதல் முறையாக 'AI' செய்தி வாசிப்பாளர்கள்



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை (AI) பயன்படுத்தி, இரண்டு செய்தி வாசிப்பாளர்களை உருவாக்கி செய்தியை ஒளிபரப்பியுள்ளது. இது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முக்கியமான மைல்கல்லாக அமைந்துள்ளது.

06

## நிதியியல் மோசடிகள் மத்திய வங்கி அறிவிப்பு



நிதியியல் மோசடிகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கி பொதுமக்களுக்கு விசேட அறித்தல் ஒன்றை விடுத்துள்ளது. சந்தேகத்திற்கிடமான இணையத்தள இணைப்புக்களை "கிளிக்" செய்ய வேண்டாம் என்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வங்கிக்கணக்கு விபரங்களை மற்றும் OTP (One Time Password) இலக்கத்தை பகிர்ந்துகொள்ள வேண்டாமென்றும்

06



## கடும் வரட்சியால் 03 மாவட்டங்களில் 4,982 பேர் பாதிப்பு

நாட்டில் தற்போது நிலவும் வரட்சியான காலநிலையால் மூன்று மாவட்டங்களில் 04 ஆயிரத்து 982 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. கேகாலை மாவட்டத்திலேயே அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வரகாபொல, ருவன்வெல்ல, எட்டியந்தோட்டை தெரணியகலை, தெஹியோவிற்ற, கலிகமுவ மற்றும் கேகாலை ஆகிய பிரதேசங்களில்

06

## பரீட்சை எழுத முன்னர் ஆலயம் சென்ற மாணவன் திடீர் மரணம்



க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் ஆலயத்துக்கு வழிபடச் சென்ற மாணவன் திடீரென உயிரிழந்தார். பலாங்கொடை பிரதேசத்தில் இச்சம்பவம் நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அரினாத் ரஞ்சித் குமார் என்ற மாணவனே, நேற்று இவ்வாறு உயிரிழந்தார். மயங்கி விழுந்த மாணவன் மரதன்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர், இவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனை பலாங்கொடை வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை

06

## குழந்தைகளை பணயக்கைதிகளாக்கி மனைவியைக் கொல்ல வந்த கணவன்

### சாதுர்யமாகச் செயற்பட்ட பொலிஸார் 09 மணி நேரத்தின் பின் குழந்தைகளை மீட்பு



குழந்தைகளை பணயக் கைதிகளாகப் பயன்படுத்தி மனைவியைக் கொல்ல வந்த கணவனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இச்சம்பவம் நேற்று (06) ஹங்வெல்ல ஜல்தர அரச வீடமைப்புத் தொகுதியில் இடம்பெற்றது. மிகச்சாதுர்யமாகச் செயற்பட்ட

06

## 2022 GCE O/L மீள் பரிசீலனை 1,343 பெறுபேறுகளில் மாற்றம்

### 1,18,485 மாணவர்கள் விண்ணப்பம்




மீள் பரிசீலனைக்கு விண்ணப்பித்த க.பொ.த. சா.த பரீட்சை (2022) பெறுபேறுகளில்,1343 மாணவர்களின் பெறுபேறுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளன. மீள் பரிசீலனைக்காக1, 18,485 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். மீள் பரிசீலனை பெறுபேறுகள் கடந்த 04ஆம் திகதி நள்ளிரவு வெளியிடப்பட்டது. பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளம்

06

# நகர்வலம்



தேசிய, மாகாண பாடசாலைகளில் நிலவும்

## ஆங்கில பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்கு டிப்ளோமாதாரர்களை நியமிக்க நடவடிக்கை

நேர்முக பரீட்சை நாளை 08ஆம் திகதி

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆக்கிலப் பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்கு டிப்ளோமாதாரர்கள் இலங்கை ஆசிரியர் சேவையின் மூன்றாம் தரத்துக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நேர்முகப் பரீட்சைக்கு 2267 பேர் தகுதி பெற்றுள்ளனர். இந்நேர்முகப் பரீட்சை நாளை 08ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி ஆங்கில ஆசிரியர் ஆட்சேர்ப்பு தொடர்பில் 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் நேர்முகப் பரீட்சைக்கு 2267 பேர் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுக்கான தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான பொது நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை நாளை 08ஆம் திகதி முதல் ஐந்து தினங்கள் (8,9,10,11 மற்றும் 13) ஆகிய தினங்களில் பத்தரமுல்ல இசுருபாய கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது.



நேர்முகப் பரீட்சைக்கு தகைமை பெற்றவர்கள் குறிப்பிட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் நகல் பிரதிகளை தனித்தனியாக இணைத்து தயாரிக்கப்பட்ட இரண்டு பிரத்தியேக கோவைகள் சகிதம் நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ள வேண்டுமெனவும் இதில் நகல் பிரதிகள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுபவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆவணங்கள் நேர்முகப் பரீட்சையில் முன்னிலைப்படுத்துவது அவசியமானதாகும். பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சேர்ப்புக்கான செயன்முறைப் பரீட்சை நோக்கம் மற்றும் பிரவேசம், ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு, தொடர்பாடலில் தெளிவு, நேர முகாமைத்துவம், முன்வைப்பு நுட்ப முறைகளின் பயன்பாடு ஆகிய அம்ச நியதிகளை உள்ளடக்கியதாக இடம்பெறவுள்ளது.

இதற்காக வழங்கப்படும் மொத்த புள்ளிகள் இருபத்தைந்தாகும். சித்தியடைய அவசியமான ஆகக் குறைந்த மொத்த புள்ளிகள் பத்தாகும்.

இது ஒவ்வொரு நியதிகளுக்கும் இரண்டு புள்ளிகள் அடிப்படையில் வழங்கப்படும்.

## அக்ரம் அறக்கட்டளை புத்தாண்டு நிகழ்வில் ரவி கருணாநாயக்க



**ருஸைக் பாரூக்**

அக்ரம் அறக்கட்டளை, வனிதா சவிய அறக்கட்டளை மற்றும் கொழும்பு இளைஞர் கழகம் இணைந்து ஒழுங்கு செய்த சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம் கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் அக்ரம் அறக்கட்டளையின் தலைவரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான மொஹமட் அக்ரம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் நிதி அமைச்சர் கொழும்பு வடக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளருமான ரவி கருணாநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

ரவி கருணாநாயக்க தனது உரையில்; நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும், இந்த நாட்டில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், மலாய் மற்றும் பர்கர் சமூகங்கள் நாட்டுக்காக உழைத்து வருகின்றனர். இந் நிகழ்வில் பல்வேறு போட்டிகள் இடம் பெற்றதுடன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

## தென் மாகாண ஆளுநர் பதவியேற்பு

**வெலிகம தினகரன் நிருபர்**



தென் மாகாண புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கடந்த 03ஆம் திகதி காலியில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மின் சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, அமைச்சர் மஹிந்த அமரவீர, டொக்டர் ரமேஷ் பதிரன, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச, பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, சம்பத் அத்துக்கோரள, அலி சப்ரி ரஹீம் உட்பட மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், ஆளுநரின் குடும்பத்தினர், ஆளுநர் அலுவலக அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## சர்வதேச நல்லிணக்க மாநாடு இன்று மலேசியாவில் ஆரம்பம்

மர்ஜான் பளீல் எம்.பி தலைமையில் இலங்கை குழுவினர் பங்கேற்பு





மக்காவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் உலக முஸ்லிம் லீக் ஏற்பாட்டில் கோலாலம்பூரில் நடைபெறும் சர்வதேச மதத் தலைவர்களின் மாநாட்டில் பங்கேற்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தலைமையிலான இலங்கை குழுவினர் நேற்று முன்தினம் (05) இரவு 8.00 மணியளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக மலேசியா சென்றடைந்தனர்.

உலகெங்கிலும் உள்ள மதத் தலைவர்களிடையே அமைதி, நல்லிணக்கம் மற்றும் வேற்றுமையில் ஒற்றுமை ஆகியவற்றை மேம்படுத்துவதை அடிப்படையாகக்கொண்ட இந்த மாநாடு இன்று (07) தலைநகர் கோலாலம்பூரில் ஆரம்பமாகவுள்ளமை விசேட அம்சமாகும்.இம் மாநாட்டில் 63 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர். பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தலைமையிலான இலங்கை குழுவில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் அஷ் ஷெய்க் எம்.ஐ.எம். ரிஸ்வி முப்தி, இலங்கை மகா போதி சங்கத்தின் தலைவர் வண. பானகல உபதிஸ்ஸ தேரர், வண. நரேந்திரன் குருக்கள், இந்து மதகுருமார் சங்க செயலாளர் சிவசிறி தர்ஷக சர்மா குருக்கள், ஹஜ் குழு முன்னாள் உறுப்பினர் அஹ்கம் உவைஸ், முஸ்லிம் இளைஞர் சங்கத்தின் தலைவர் அஷ் ஷேக் எம்.எஸ். எம் தாஸிம், கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியர் மொஹமட் ரசூல் தீன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

## ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட இருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் கேரள கஞ்சாவினை வைத்திருந்த இரு சந்தேக நபர்களை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய 05 ஆம் திகதி இரவு சிராவஸ்திபுர பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளதுடன் பத்து கிராமும் 340 மில்லி கிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளையும் 250 கிராமிற்கும் அதிகமான கேரள கஞ்சாவினையும் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 26,33 வயதுடைய ஹிதோகம திவுள்வெவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசா ரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.சந்தேக நபர்கள் அநுராதபுர நகர் மற்றும் சிராவஸ்திபுர பகுதிகளுக்கு போதைப்பொருளினை விற்பனை செய்வதுடன் பிரத்தியேக வகுப்புக்களுக்கு வரும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கேரள கஞ்சாவினை விற்பனை செய்து வருகின்றமையும் மேலதிக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## துபாயில் கலைப் பண்பாட்டு திருவிழா













துபாயில் இயங்கி வரும் சுற்றல் கல்வி மேலாண்மை மையம் நடத்திய கலைப் பண்பாட்டுத் திருவிழா மற்றும் பட்டமளிப்பு விழா என்பன கடந்த (5) துபாய் கொமியுனிட்டி சிட்டி செண்டரில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் இலங்கை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், இனிய நந்தவனம் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், துபாய் தொழிலதிபர் அப்துல் அஜித் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கினர். விழாவிற்கான ஏற்பாடுகளை கற்றல் கல்வி மேம்பாட்டு மையத்தின் நிறுவுனர் மற்றும் தலைவர் முனைவர் மு.ரா. ரோகினி சிறப்பாக செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு தமிழ்ச்சங்க நிறுவனர் தினம்



கொழும்புத் தமிழ்ச் சங்க நிறுவனர் தின நிகழ்வு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் (05) மாலை 5 மணிக்கு சங்கத்தின் தலைவர் கலாநிதி க. இரகுபரன் தலைமையில் நடைபெற்றத.

இந்நிகழ்வில் "உலகத்தமிழ் இலக்கிய வரைபடம்" என்றத்தலைப்பில் தமிழ்நாடு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ. ராமசாமி உரையாற்றினார்.

ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் "சாகித்ய ரதனா" தி. ஞானசேகரன் ஞானம் வெளியீடான "பொற்கால இலக்கியம்" என்ற நூலை சங்கத்தின் சார்பில் வழங்குவதையும் அருகில் சங்கத்தின் தலைவர் கலாநிதி க. ரகுபரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## கற்பிட்டி – உச்சமுனை கடற்பிரதேசத்தில் 120 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



கற்பிட்டி உச்சமுனை கடற்பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒருதொகை பீடி இலைகள் (04) கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

எனினும் இந்த சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை என கடற்படையினர் குறிப்பிட்டனர். வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினரால் குறித்த கடற்பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த பீடி இலைகள் கைப்பற்றுள்ளன.

உச்சமுனை பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட உர மூடைகளை கடற்படையினர் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது, 04 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 120 கிலோ கிராம் பீடி இலைகள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கும் நோக்கில் குறித்த பீடி இலைகள், கடல்மார்க்கமாக கொண்டுவரப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்படையினரால், கைப்பற்றப்பட்ட 120 கிலோ கிராம் பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தமது பொறுப்பில் வைத்துள்ளதாக கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

2024 ஆண்டின் முதல் 03 மாதங்களில்

# இறக்குமதி, ஏற்றுமதிகள் 12.9 வீதத்தால் பாரிய வளர்ச்சி

இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகள் 12.9 வீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடுகையில், இது பாரிய வளர்ச்சியை காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வளர்ச்சியில், நுகர்வோர் பொருட்கள் 16.8 வீதமாக வளர்ச்சியைப் பெற்றுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை, சுற்றுலாத் தொழிலுக்குப் பயன்படும் பொருட்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உற்பத்தித்துறைக்குத் தேவையான உள்ளீடுகள் 8.2 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளன.



உற்பத்தித்துறை, சுற்றுலாத்துறை மற்றும் முதலீட்டை இலக்கு வைத்து அரசாங்கம் திட்டமிட்டபடி பொருளாதார வளர்ச்சியை ஊட்டியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில், ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், ஏற்றுமதி குறிப்பிடத்தக்க வகையில் 5.7 வீதமாக அதிகரித்துள்ளது. அத்துடன், விவசாயத்துறை ஏற்றுமதி 5.1 வீதமாகவும், தொழில்துறை ஏற்றுமதி 06 வீதமாகவும் அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## காணாமலானோர் அலுவலகத்துக்கு உறுப்பினர்களை நியமிக்க விண்ணப்பம்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்காக www.parliament.lk எனும் பாராளுமன்ற இணையத்தளத்தில் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான உறுப்பினர்கள் நியமனம் என்ற இணைப்பில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் விண்ணப்பங்களை தயாரித்து 2024 மே 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும்.

விண்ணப்பங்கள், அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம், அரசியலமைப்புப் பேரவை அலுவலகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலில் 'காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்துக்கான உறுப்பினர்கள் நியமனம்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

## நாரா பணிப்பாளர் நாயகமாக கலாநிதி கே. அருளானந்தன்

அமைச்சர் டக்ளஸ் நியமனக் கடிதம் கையளிப்பு



கடற்றொழில் அமைச்சின் கீழுள்ள நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாக கலாநிதி கே. அருளானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நியமனக் கடிதம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று (06) அமைச்சில் வழங்கப்பட்டது. நாரா நிறுவனத்தில் கடந்த 30 வருடங்களுக்கு மேல் பணியாற்றி வரும் கலாநிதி கே. அருளானந்தன், சமுத்திரவியல் விஞ்ஞானத்தில் கலாநிதி பட்டதாரியாவார். நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் செல்வி நயனா குமாரி சோமரத்னவும் கலந்து கொண்டார்.

## பெரும்போக நெல் கொள்வனவை இம்மாதம் 15 இல் நிறுத்த தீர்மானம்

பெரும்போக நெல் கொள்வனவுகளை இம்மாதம் 15 இல்,முடிவுக்குக் கொண்டுவரவுள்ளதாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்துள்ளார். புத்தாண்டை முன்னிட்டு இடைநிறுத்தப்பட்ட நெல் கொள்வனவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் விவசாயிகளிடமிருந்து நெல் கிடைக்கவில்லை.இதனால், நெல் கொள்வன வை நிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் அரிசி வழங்கும் திட்டத்துக்காக சிறிய, நடுத்தர ஆலை உரிமையாளர்கள், அரசின் கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்கின்றனர்.

இதனால்,அரசாங்க களஞ்சியசாலைகளிலிருந்து அரிசிக்காக நெல்லை வழங்குவதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.இந்நிலையில், களஞ்சியசாலைகளை திறந்து வைப்பது தேவையற்றதென, நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட மேலும் தெரிவித்தார்

## மின் கட்டணத்தில் ஜூன் முதல் மீண்டும் திருத்தம்

விரைவில் PUCSL விடம் சமர்ப்பிப்பு

மின் கட்டணம் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மீண்டும் திருத்தம் செய்யப்படவுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்‌ஷா ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை தற்போது மின்சாரக் கட்டணம் தொடர்பான வரைபை தயாரித்து வருகிறது.

இறுதி வரைவு அடுத்த வாரம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

முன்மொழிவை சமர்ப்பித்த பின்னர், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


### மக்கள் வங்கி

**பிராந்திய தலைமைக் காரியாலயம் - புத்தளம்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் / சேவை மையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட 07.06.2024 வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் திகதிகள் 08.06.2024 & 09.06.2024**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | வென்னப்புவ |
|---|---|
| கிளைகள் | புத்தளம், சிலாபம், வென்னப்புவ, நாத்தாண்டிய, கல்பிட்டிய, மாதம்பை, ஆனமடு, தங்கொட்டுவ, மஹவெவ, மாரவில |
| சேவை மையங்கள் | மதுரங்குளிய, சிலாபம் மீன்பிடித்தளம், ஆரச்சிக்கட்டுவ, உடப்புவ, பொலவத்த, லுனுவில, உல்ஹிதியாவ, கொட்டாரமுல்ல, வலிப்பென்னாகஹமுல்ல, நாரவில, நுரைச்சோலை, ஆண்டிகம, தொடுவாவா |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**புத்தளம்**
**தொலைபேசி இல. 032-2253301**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation



### விலைமனு கோரல்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வடமத்திய மாகாண அலுவலகத்தை நிறுவுவதற்கு கட்டிடம் ஒன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விலைமனு கோரல்**

கட்டிட வளாகம்

| அலுவலகம் | சதுர அடி |
|---|---|
| வடமத்திய மாகாண அலுவலகம் | 2,000 சதுர அடி |

| அலுவலகம் | தேவையான விவரக்கூற்று |
|---|---|
| வடமத்திய மாகாண அலுவலகம் | அநுராதபுரம் நகரத்திற்கு அண்மையில் |
| | நீர் மின்சாரம் தொலைபேசி வசதிகள் |
| | மலசலகூட வசதிகள் |
| | வாகனம் நிறுத்தும் வசதி (ஆகக் குறைந்தது 04வாகனங்கள்) |

- அதற்கு மேலதிகமாக பின்வரும் வசதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வாகனங்களுக்கு தடையின்றி பிரவேச வீதி காணப்படுதல்.
- பிரவேச வீதியை மூடுவதற்கு ஏற்ற விதத்தில் வாயிற் கதவு காணப்படுதல்.
- பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தங்கியிருக்க முடியுமான விதத்தில் கட்டிடத்திற்கு அப்பால் காவல் அறையொன்று மற்றும் வெளியில் மலசலகூட வசதி காணப்படுதல் அல்லது பின்னர் நிர்மாணிக்கும் ஆற்றல்.
- அங்கவீனர்களுக்கு வருகைத் தருவதற்கான பிரவேச வீதி இருத்தல் அல்லது பின்னர் நிர்மாணித்தல்.
- மாடிக் கட்டிடம் எனின் கீழ் மாடியாக இருத்தல். அதற்கு மேல் மாடிகள் எனின் மின் உயர்த்தி பொருத்தப்பட்டிருத்தல் மேலதிக தகைமையாகும். அத்தோடு ஒவ்வொரு மாடிக்கும் போதிய மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டும்.
- வாகனங்கள் நிறுத்துவதற்கு போதிய இடவசதி இருத்தல் வேண்டும். (நிறுத்த முடியுமான வாகனங்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)
- குளிரூட்டல் தொகுதி மற்றும் தீ அணைப்பு உபகரணங்களை பின்னர் வழங்கும் இணக்கத்தின் பேரில் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

கட்டிடத்தின் உள்ளக அமைப்பு மற்றும் கட்டிடத்தின் உரிமை பற்றிய தகவல்களை உள்ளடக்கி தங்களது விலைமனுக்களை இணைப்பிரதிகளில் 2024.05.28 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் பதிவாளர் நாயகம் திணைக்களம், இல .234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவோ முடியும். விலைமனுக்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வடமத்திய மாகாண அலுவலகத்தை நிறுவுவதற்கு கட்டிடம் ஒன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விலைமனு கோரல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

2024.05.28 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். அந்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் நாயகம்**
**திணைக்கள கொள்முதல் குழுத் தலைவர்**



### இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

TRC

### விலைமனுக்கோரல்

**TRCSL மின்பிறப்பாக்கியின் தானியங்கி பரிமாற்ற சுவிட்சை (ATS) மாற்று வழிக்கு முன்மொழியப்பட்ட மின் தொடர்பு இணைப்புப் பலகையை வழங்குதல் மற்றும் நிறுவுதல்**

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் **TRCSL மின்பிறப்பாக்கியின் தானியங்கி பரிமாற்ற சுவிட்சை (ATS) மாற்று வழிக்கு முன்மொழியப்பட்ட மின் தொடர்பு இணைப்புப்பலகையை வழங்குதல் மற்றும் நிறுவுதற்கு** தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மனு ஆவணங்களை TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.5,000.00** கட்டணத்தினை செலுத்தி **2024.05.27** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவினை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்வி மனுக்களை சரியான முறையில் பூரணப்படுத்தி பிரதியை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2024.05.29 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், சிரேஷ்ட கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"TRCSL மின்பிறப்பாக்கியின் தானியங்கி பரிமாற்ற சுவிட்சை (ATS) மாற்று வழிக்கு முன்மொழியப்பட்ட மின் தொடர்பு இணைப்புப்பலகையை வழங்குதல் மற்றும் நிறுவுதல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு, (மேஜர்),**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**

SELACINE






### தேசிய தர விருதுகளில் சிகரமெய்திய உயர்தர பட்டரிகள்!

EXIDE, LUCAS மற்றும் DAGENITE பட்டரிகளின் உற்பத்தியாளரான ASSOCIATED BATTERY MANUFACTURERS (CEYLON) LIMITED நிறுவனம், இலங்கை தர நிர்ணய நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட விருது வழங்களில் கௌரவமிக்க விருதான தேசிய தர விருது 2022 இனை பெற்றுக்கொண்டது. ISO 9001:2015, ISO 14001:2015 தரச் சான்றிதழ்களை தன்னகத்தேகொண்ட ABMCL நிறுவனமானது 1960 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் பட்டரி உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றது. புத்தாக்கம் மற்றும் உயரிய தரம் என்பவற்றை நிலைநாட்டுவதற்கான எமது முயற்சிக்கு கிடைத்த இவ்வுயரிய விருதானது எமது அர்பணிப்பை உயர்த்திக் காட்டுகின்றது.

இவ்விருது ABMCL நிறுவனத்தின் உற்பத்தித்திறனை கொண்டாடுவதற்காக மட்டுமல்லாது நாடுமுழுவதும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதிலும் பேணிவளர்ப்பதிலும் 150 வருடங்களுக்கும் மேலான Browns நிறுவனத்தின் பணியினை அடிக்கோடிட்டு காட்டுகின்றது. ABMCL ன் குறிக்கோளான புத்தாக்கம் மற்றும் உயரிய தரத்தினை நிலைநாட்டுவதற்கு Browns கைக்கோர்த்து நிற்கின்றது.

EXIDE TRUSTED FOREVER
Lucas UK'S ACE OF BATTERIES
DAGENITE ALL TERRAIN BATTERY
MANUFACTURED BY Associated Battery Manufacturers (Ceylon) Limited
MARKETED BY Browns A Heritage of Trust

SELACINE

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 24ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 28

### குறள் தரும் சிந்தனை



ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

*நல்ல மகனைப் பெற்றெடுத்தவள் என்று ஊரார் பாராட்டும் பொழுது அவனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியை விட அதிக மகிழ்ச்சியை அந்தத் தாய் அடைவாள்.*

# பொருளாதார முன்னேற்றத்துக்கு சர்வதேச ரீதியில் பாராட்டுகள்!

2022ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை முகம்கொடுத்தது. அதன் ஊடாக நாடே வங்குரோத்துக்கு நிலைக்கு உள்ளானது.

அதன் காரணத்தினால் மக்கள் பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கும் பாதிப்புக்களுக்கும் முகம்கொடுத்தார்கள். குறிப்பாக அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களது விலைகளும் அதிகரித்து பொருளாதாரம் மக்களுக்கு பாரிய சுமையானது. மக்கள் செய்வதறியாது நிர்க்கதி நிலைக்கு உள்ளாகி இருந்தனர். அந்த சூழலில் இந்நாட்டுக்கு உதவ எவரும் முன்வராத நிலைமை உருவாகி இருந்தது.

அதனால் மக்களது எதிர்பார்ப்புக்களை மாத்திரமல்லாமல் கோரிக்கைகளையும் கூட நிறைவேற்ற முடியாத நெருக்கடி நிலைக்கு அன்றைய ஆட்சியாளர்கள் உள்ளாகினர். அதன் விளைவாக அவர்கள் பதவிவிலக வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டனர்.

அதேநேரம் அந்தச் சூழலில் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத நிலையும் ஏற்பட்டிருந்தது. ஒவ்வொரு அரசியல் கட்சியின் தலைவரும் நாட்டினதோ மக்களினதோ நலன்களுக்கு முன்னுரிமை அளித்து தீர்மானங்களை எடுக்க முன்வரவில்லை. மாறாக அவர்கள் தங்கள் தங்கள் கட்சிகளின் நலன்களுக்கே முக்கியத்துவம் அளித்தனர்.

அவ்வாறான சூழலில் கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றார்.

அத்தோடு நில்லாது பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களையும் உடனடியாக ஆரம்பித்தார். இந்த வேலைத்திட்டங்களில் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்குத்தான் அவர் முக்கியத்துவம் அளித்தார்.

அதன் பயனாக குறுகிய காலப்பகுதிக்குள் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறத் தொடங்கியது. அத்தோடு பொருளாதார மீட்சிக்கான ஜனாதிபதியின் வேலைத் திட்டங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கையும் புதிய எதிர்பார்ப்பும் ஏற்பட்டன.

ஆனால் அன்றைய சூழலில் நாட்டின் தலைமையை ஏற்கவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கவும் வேலைத் திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்திராவிட்டால் ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் காணப்படும் வழிப்பறிக் கொள்ளைகள் உள்ளிட்ட குற்றச்செயல்களும் தலைவிரித்தாடும் நாடாக இலங்கை மாறி இருக்கும். அவ்வாறான சமூக சீரழிவுகள் தலைதூக்கவும் இடமளிக்காத தடைக்கற்களாக ஜனாதிபதி முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் அமைந்திருந்தன.

இந்த வேலைத்திட்டங்களின் பயனாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாடு பொருளாதார நெருக்கடி உள்ளானதா? என வினவும் அளவுக்கு பொருளதார நிலையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு இருக்கிறது.

இவ்வாறான சூழலில் ஜோர்ஜியாவின் டிப்லிசியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57வது வருடாந்த மாநாடு நடைபெறுகிறது. இம்மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றியுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசாட்சுகு அசகாவாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துதல், முன்னேற்றமடைதல், அரச நிர்வாகத்தைப் பலப்படுத்துதல், கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றங்கள் என்பன குறித்து இச்சமயம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன் போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர், 'பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்தவும் அரச நிர்வாகத்தை வலுப்படுத்தவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள தீர்மானங்கள் வரவேற்கத்தக்கவை' என்றும் 'பொருளாதார மீட்சிக்காக இலங்கை எடுக்கும் தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த சனியன்று இலங்கைக்கு வருகை தந்திருந்த ஜப்பான் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா, 'பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுத்து ஸ்திரமான நிலையை ஏற்படுத்த ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களைப் பாராட்டியுள்ளார்.

அதேநேரம் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு ஏற்கனவே பல சர்வதேச நிறுவனங்களும் நாடுகளும் பாராட்டுக்களையும் தெரிவித்தும் இருக்கின்றன.

ஆகவே ஜனாதிபதி முன்னெடுத்துவரும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு உள்நாட்டில் மாத்திரமல்லாமல் சர்வதேச மட்டத்திலும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனால் இத்திட்டங்கள் தொடர்ந்தும் வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்காக ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதுவே இப்போதைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# நட்சத்திர வேட்பாளர்கள் களம் காணும் இந்திய மூன்றாம் கட்ட தேர்தல் இன்று



இந்திய நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெறுகின்றது. மொத்தம் 10 மாநிலங்களில் உள்ள 95 தொகுதிகளில் நேற்றுமுன்தினம் மாலையுடன் தேர்தல் பிரசாரம் நிறைவடைந்தது.

நட்சத்திர வேட்பாளர்கள் பலர் இத் தேர்தலில் களம் காணும் நிலையில் தேசிய அளவில் மூன்றாம் கட்ட தேர்தல் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இந்தியாவின் மிகப்பெரிய ஜனநாயக திருவிழாவான மக்களவை தேர்தல் தற்போது நடைபெற்று வருகிறது. 18 ஆவது மக்களவைக்கான 543 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக ஏழு கட்டங்களாக இந்தியாவில் தேர்தல் நடைபெறுகிறது. இந்திய நாடாளுமன்றத் தேர்தல் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி தமிழகம் உள்ளிட்ட 21 மாநிலங்களில் ஆரம்பமானது.

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வரை வாக்குப்பதிவு நடைபெறுகிறது. ஜூன் நான்காம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட இருக்கின்றன.

இந்தியாவின் அடுத்த பிரதமர் யார் என்ற எதிர்பார்ப்போடு நடைபெற்று வரும் இத்தேர்தலில் வாக்காளர்கள் தங்களுக்கு விருப்பமான வேட்பாளர்களை மக்களவை உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கின்றனர்.

குறிப்பாக முதல் தலைமுறை வாக்காளர்கள் இந்த முறை அதிக அளவில் வாக்களிக்க இருப்பதால் அவர்கள் பங்கு அதிகம் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை இரு கட்ட தேர்தல்கள் நிறைவு பெற்றிருக்கும் நிலையில் மூன்றாம் கட்டத் தேர்தல் இன்று நடைபெறுகின்றது.

குஜராத், உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, பீகார், சத்தீஸ்கர், மேற்கு வங்கம், கோவா, அசாம் ஆகிய 10 மாநிலங்களில் உள்ள 94 தொகுதிகளில் இன்று தேர்தல் நடைபெறுகின்றது. இவற்றில் குஜராத்தில் ஒரே கட்டமாக 26 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு நடைபெறுகிறது. மேலும் கோவா மாநிலத்தில் வடக்கு கோவா தெற்கு கோவா ஆகிய இரு தொகுதிகளிலுமே ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. குஜராத்தில் காந்திநகர் பகுதியில் மதிய அமைச்சர் அமித் ஷா, ராஜ்கர் தொகுதியில் காங்கிரஸ் மூத்த தலைவர் திக் விஜய் சிங், பாராமதி தொகுதியில் சரத்பவாரின் மகள் சுப்ரியா சூலே, மெயின்புரி தொகுதியில் அகிலேஷ் யாதவின் மனைவி டிம்பிள், கர்நாடக மாநிலம் தார்வாட் தொகுதியில் மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோசி, கோவா தொகுதியில் பெரும் பணக்காரரான பல்லவி டெம்போ, உத்தரப் பிரதேசத்தில் அகிலேஷ் யாதவ் என பல நட்சத்திர வேட்பாளர்கள் களம் காண்பது குறிப்பிடத்தக்கது.






# இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்தோருக்கான *Journalism in the Age of Disinformation: The Truth Toolkit for Journlists* (தகவல் யுகத்தில் ஊடகங்கள் ஊடகவியலாளர்களுக்கான கருவித் தொகுப்பு) எனும் தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 2 நாட்கள் கொண்ட இருநாள் பயிற்சிப் பட்டறை அண்மையில் அம்பாரை ஆரிவயன் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்பேசும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்தோருக்கான இப்பயிற்சிப் பட்டறையில் 25 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். செய்திகளின் துல்லியத்தன்மையை உறுதிசெய்தல், நவீன ஊடக உலகில் போலிச்செய்திகளை அடையாளம் காணுதல், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தினால் ஊடகத் துறை எதிர்கொள்ளும் சவால்கள், செய்தி அறிக்கையிடல் போன்ற தலைப்புகளில் செயலமர்வு இடம்பெற்றிருந்தது.

செயலமர்வின் வளவாளர்களாக விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் முகம்மட் பைறூஸ் கலந்து கொண்டிருந்தார்.

இப்பயிற்சி செயலமர்வினை இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பயிற்சிகளுக்கான இணைப்பாளர் கீர்த்திக்கா மகாலிங்கம் நெறிப்படுத்தியிருந்தார்.



**றிசாத் ஏ. காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# உஷ்ண காலத்தை சமாளிப்பது எப்படி?



கோடையில் தினமும் இரண்டு வேளை குளிக்க வேண்டும். மூன்றில் இருந்து ஐந்து லீட்டர் தண்ணீர் குடிப்பது அவசியம். ஐஸ் தண்ணீரை விட, மண்பானைத் தண்ணீர் நல்லது.

எண்ணெயில் பொரித்த, வறுத்த, கொழுப்பு அதிகமுள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும். சீனி அதிகமுள்ள இனிப்புப் பலகாரங்கள், கிரீம் மிகுந்த பேக்கரி பண்டங்கள், பேர்கர், பீட்ஸா, ஐஸ்கிரீம் போன்றவற்றையும் தவிர்ப்பது நல்லது. அதேபோல், சூடான, காரமான, மசாலா கலந்த, உப்பு நிறைந்த உணவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

இட்லி, இடியப்பம், தயிர்சாதம், மோர் சாதம், அகத்திக் கீரை, முருங்கைக்கீரை, பொன்னாங்காணிக் கீரை, கரட், பீட்ரூட், பீர்க்கங்காய், வெண்டிக்காய், முள்ளங்கி, பாகற்காய், புடோல், அவரை, முட்டைக்கோஸ், வாழைத்தண்டு, வெங்காயப் பச்சடி, தக்காளிக்கூட்டு முதலியவை சிறந்த கோடை உணவுகள்.

இளநீரில் உள்ள பொட்டாசியம், சோடியம், கால்சியம், மெக்னீசியம் முதலிய தாதுக்கள் உடலின் வெப்பநிலையை உள்வாங்கி, சுற்றுச் சூழல் வெப்பநிலைக்கு ஏற்றபடி உடலின் வெப்பத்தைக் குறைக்கின்றன. இதனால், உடலில் நீரிழப்பால் ஏற்படுகின்ற பாதிப்புகள் உடனடியாகக் குறைகின்றன.

கோடைக் காலத்தில் தொடர்ந்து 2 மணி நேரத்துக்கு மேல் வெயிலில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். பகல் 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது நல்லது.

பகலில் வெளியில் செல்ல வேண்டியது அவசியம் ஏற்பட்டால், தலைக்குத் தொப்பி போட்டுக்கொள்ள வேண்டும். அல்லது குடை கொண்டு செல்ல வேண்டும். கண்களுக்குச் சூரியக் கண்ணாடி அணிந்துகொள்ளலாம். சருமத்தில் 'சன் ஸ்கிரீன் லோஷ'னைப் பூசிக்கொள்ளலாம்.

# சவூதியில் மின்சார கார் சார்ஜர்களை உருவாக்கும் ஆய்வு மையம் ஆரம்பம்

சவூதி அரேபியா மின்சார கார் சார்ஜர்களை உருவாக்குவதற்கான ஆராய்ச்சி மையத்தை தொடங்கியுள்ளது. நம்பகமான மற்றும் திறமையான சார்ஜிங் தீர்வுகள் மின்சார வாகன ஓட்டுநர்களுக்கு வழங்கப்படுகின்றன.

எலக்ட்ரிக் வாகன உட்கட்டமைப்பு நிறுவனம் ரியாத்தில் மின்சார வாகன சார்ஜர்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான ஒரு மையத்தை தொடங்கியுள்ளது. இதுவே பிராந்தியத்தில் முதன்மையானது என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய மையம் பலவிதமான சார்ஜிங் சாதனங்கள் மற்றும் மென்பொருட்களை சோதனை செய்வதற்கும், ஆய்வு செய்வதற்கும் பயன்படுத்தப்படும். சிறந்த உபகரணங்கள் மற்றும் மென்பொருளை பயன்படுத்துவதை உறுதி செய்ய இது EVIQ இன் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துகின்றது.





"இந்த மையம் எப்போதும் புதுப்பித்த நிலையில் இருக்க எங்களுக்கு உதவும், வேகமான சார்ஜிங் தொழில்நுட்பங்களுக்கான சமீபத்திய தீர்வுகள் பயனர்களுக்கு சிறந்த சார்ஜிங் அனுபவத்தை வழங்குகின்றன" என்று EVIQ நிர்வாக அதிகாரி முஹம்மது பக்ர் கஸ்ஸாஸ் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், சவூதி அரேபியாவில் உள்ள மின்சார வாகன ஓட்டுனர்களுக்கு நம்பகமான மற்றும் பயனுள்ள சார்ஜிங் தீர்வுகளை வழங்குவதை இது உறுதி செய்யும்" என்றும் அவர் கூறினார். சவூதி அரேபியா தனது 2030 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்திப் பாதையில் பலவிதமான முன்னெடுப்புகளை செய்து வருகின்றது. மருத்துவத்துறை, தொழில்நுட்பத்துறை, நவீன முறையின் விஞ்ஞான கண்டுபிடிப்புகள், விவசாயத்துறை மற்றும் நாட்டின் செழிப்பான வளங்களை ஏற்படுத்துதல் போன்ற எல்லாத் துறைகளிலும் இன்று முன்னேற்றம் அடைந்து கொண்டு வரும் வளர்முக நாடாக சவூதி காணப்படுகின்றது.

2030 என்ற இலக்கை நோக்கிய பயணத்தில் சவூதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸ் வழிகாட்டலில் முடிக்குரிய இளவரசர் முஹம்மது பின் சல்மான் பின் அப்துல் அஜீஸ் மேற்கொள்ளும் அயராத ஊக்குவிப்பினால் இந்த முன்னேற்றம் காணப்படுகின்றது.



அஷ்ஷெய்க்
**முஜீபுர் ரஹ்மான்...**
(மதனி) சிரஷ்ட விரிவுரையாளர்
அல்ஹுதாக் கல்லூரி, திஹாரிய

# "கடவுள் அன்பாய் இருக்கிறார்" என்பதே கிறிஸ்தவ மறையின் இதயத்துடிப்பு




தன்னை மையப்படுத்தாமல் அடுத்தவரை மையப்படுத்தி எழும் உன்னத உணர்வே உண்மையான அன்பு. அந்த அன்பை பறைசாற்றும் இதயங்களெல்லாம் ஆண்டவன் விரும்பி வாழும் ஆலயங்கள்தான்.

ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பு ஒன்றே இயேசுவின் சீடர்களுக்கு அடையாளமாக அமைய வேண்டும் என்ற முக்கிய பாடத்தை இந்த ஞாயிறு இரண்டாம் வாசகமும் நற்செய்தியும் வலியுறுத்திக் கூறுகின்றன.

அதுதான், "கடவுள் அன்பாய் இருக்கிறார்" (1 யோவான் 4:8) என்ற சொற்கள். "கடவுள் அன்பாய் இருக்கிறார்" என்ற மூன்று சொற்கள் கிறிஸ்தவ மறையின் இதயத்துடிப்பாக அமைந்துள்ளதுபோல் இந்த உண்மை ஒன்றே அனைத்து உண்மையான மதங்களின் உயிர்த்துடிப்பு.

"கடவுள் அன்பாய் இருக்கிறார்" என்று கூறும் யோவான், அந்த அன்பு, வானத்தில் இருந்தபடியே, நம் வழிபாட்டை எதிர்பார்க்கவில்லை, மாறாக, அந்த அன்பை செயல்வடிவில் வெளிப்படுத்த, தன் மகனை இவ்வுலகிற்கு இறைவன் அனுப்பினார் என்று தெளிவுபடுத்துகிறார். இத்தகைய அன்பை உணர்ந்தவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை, யோவானின் திருமுகம் இவ்வாறு கூறியுள்ளது:

கடவுள் இவ்வாறு நம்மீது அன்பு கொண்டார் என்றால் நாமும் ஒருவர் மற்றவர்மீது அன்பு கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். (1 யோவான் 4:11) "கடவுள் நம்மீது அன்பு கொண்டார் என்றால் நாமும் கடவுள் மீது அன்புகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று யோவான் கூறியிருந்தால் அது பொருளுள்ள வாக்கியமாகத் தெரிந்திருக்கும். ஆனால், யோவான் கூறியுள்ள சொற்கள் புதிராக உள்ளன. கடவுள்



நம்மீது கொள்ளும் அன்புக்கு நாம் அளிக்கக்கூடிய பதிலிறுப்பு நாம் மற்றவர்கள் மீது கொள்ளும் அன்பு என்று யோவான் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இந்தக் கண்ணோட்டத்தில் அவர் சிந்திப்பதற்குக் காரணம், இயேசு, இதே எண்ணங்களை இறுதி இரவுணவின்போது சீடர்களுக்குக் கூறியிருந்தார். அந்தப் பகுதியே ஞாயிறு நற்செய்தியாக உள்ளது.

இயேசு தன் சீடர்களின் காலடிகளைக் கழுவிய பின் புதிய கட்டளையொன்றை அவர்களுக்கு வழங்கினார்: "'ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்' என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்" என்றார். (யோவான் 13:3435)

இயேசு வழங்கிய இந்தப் புதிய கட்டளை நாம் வழக்கமாகச் சிந்திக்கும் பாணியிலிருந்து வேறுபடுவதை உணர்கிறோம். "நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் என்னிடம் அன்பு செலுத்துங்கள்" என்று இயேசு கூறியிருந்தால், அதை நாம் எளிதில் புரிந்து கொள்வோம். ஆனால், கிறிஸ்தவ அன்பின் நோக்கம் என்ன என்பதை இயேசு தெளிவாக்குகிறார். "நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" என்பதை, தன் புதிய கட்டளையாகத் தருகிறார்.

நற்செய்தியில்"என் தந்தை என் மீது அன்பு கொண்டுள்ளது போல, நானும் என் தந்தை மீது அன்பு கொண்டுள்ளேன்" என்றும், "நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் என் மீது அன்பு கொண்டிருக்க வேண்டும்" என்றும் இயேசு சொல்லியிருந்தால், அவற்றை யாரும் எளிதில் புரிந்து கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் முடியும். ஆனால், இங்கு இயேசு, "என் தந்தை என் மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளேன்" (யோ. 15:9) என்று கூறியபின், மீண்டும் ஒருமுறை தான் வழங்கிய புதிய கட்டளையை சீடர்களுக்கு நினைவுறுத்துகிறார். "நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை" (யோ. 15:12) என்று கூறுகிறார்.

அன்பு என்றால், 'உனக்கு நான், எனக்கு நீ' அல்லது, 'நமக்கு நாம்' என்று உருவாகக்கூடிய குறுகிய வட்டங்களை உடைத்து, அன்பிற்கு விடுதலை தரும் வண்ணம் இயேசு பேசுகிறார்.

நாம் ஒருவர் மீது அன்பு கொண்டால் அவர் பதிலுக்கு, நம்மீது அன்பு கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கை. ஆனால், இயேசு, தன் சீடர்களுக்குச் சொல்லித் தந்த அன்பு, பிரதிபலனை எதிர்பார்த்து காட்டப்படும் அன்பு அல்ல என்பது, தெளிவாகப் புரிகிறது. இந்த அன்பு, நீநான்நாம் என்ற குறுகிய வட்டத்தை விட்டு வெளியேறி, அடுத்தவர், அதறகடுத்தவர் என்று, மேலும், மேலும் பரந்து, விரிந்து செல்லவேண்டும் என்பதே இயேசுவின் விருப்பம்.

அன்பின் விரிவைப்பற்றி கூறிய இயேசு, அடுத்த வரியில், அன்பின் ஆழத்தையும் தெளிவுபடுத்துகிறார்: "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோ. 15:13) உச்சக்கட்ட சவாலாக ஒலிக்கும் இச்சொற்கள் கோடான கோடி உன்னத மனிதர்கள், அன்பின் சிகரங்களை அடைவதற்கு ஓர் உந்து சக்தியாக அமைந்து வருகின்றன.

அருட்பணி எல்.எக்ஸ்.ஜெரோம்

## உலக அமைதிக்கான செபநாயகி பாத்திமா அன்னை திருவிழா



கத்தோலிக்கத் திருச்சபை புனித பாத்திமா மாதாவின் திருவிழாவை எதிர்வரும் 13 ஆம் திகதி சிறப்பிக்கின்றது.

அத்துடன் மே மாதத்தில் மாதாவின் வணக்கமாதம் கொண்டாடப்படும் வேளையில் மாதாவின் திருச்சுரூபம் வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு குடும்ப வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

இந்த திருவிழாவுக்கு சிறந்த வரலாறு உள்ளது. 1916ஆம் ஆண்டு வசந்த காலத்தில் போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா என்ற சிற்றூரின் வயல்வெளிகளில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த லூசியா சாந்டோஸ், ஜெசிந்தா மார்ட்டோ, பிரான்சிஸ்கோ மார்ட்டோ ஆகிய மூன்று சிறுவர்களுக்கு அன்னை மரியாள் தோன்றி உலக அமைதிக்குத் தேவையான சில செய்திகளை வெளிப்படுத்தினார்.

அன்னை வெளிப்படுத்திய மூன்று இரகசியங்கள் நிறைவேறிவிட்ட நிலையில் அன்னை உலக மக்களுக்கு விடுத்த செய்திகளையும், அவற்றில் நமக்குள்ள கடமைகளையும் நாம் புரிந்து கொள்தல் அவசியமாகிறது. அன்னை கொடுத்த காட்சிகள் அனைத்திலும் அவர் விடுத்த வேண்டுகோள்: "தவம், செபமாலைச் செபித்தல், அன்னையின் மாசற்ற இதய பக்தி." ஆகியவையே.

பாவங்களுக்காகப் பரிகாரம் செய்ய வேண்டும் என்று மூன்று பிள்ளைகளுக்கும் அன்னை சொன்ன அதே வேளையில், செபமாலை செபிக்கவும் அழைப்பு விடுத்தார்.

அன்னைக் காட்சிக் கொடுத்த ஆறுமுறைகளிலும் உலக அமைதிக்காக செபமாலையை ஒரு கருவியாகத் தினசரி பயன்படுத்த வேண்டும் என்று மொழிந்தார். முதல் உலகப்போர் முடியும் வரை செபமாலையைத் தியானித்துச் செபமாலை அன்னைக்குக் காணிக்கையாக ஒப்புகொடுக்கப் பணித்தார்.

ஆனால் முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்கள் முடிந்தாலும் உலகத்தில் போர்களும் பயங்கரவாதமும் மாறிமாறி ஒரு சுழற்சியாக நடைப்பெற்றுக் கொண்டே தான் இருக்கின்றன. அவைகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை அந்த நிலையில் தொடர்ச்சியான எமது செபமாலை தியானம் யுத்தங்கள் ஓய்ந்து உலகின் சமாதானத்திற்கு வழிவகுக்கட்டும்.

எல். மிலியன் ஜேம்ஸ்

## மடுமாதா திருச்சொரூப பவனி கிளிநொச்சியில்







மடு மாதாவின் முடிசூட்டலின் நூறாவது ஆண்டு நிறைவையொட்டி மடுத் திருப்பதியிலிருந்து மடு அன்னையின் திருச்சொரூபம் வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆலயங்களுக்கு பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது.அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகை தந்த மடுமாதாவை புனித திரேசாள் ஆலயத்தின் பங்குத்தந்தை தலைமையிலான குழுவினர் வரவேற்று அழைத்துச் செல்வதைப் படங்களில் காணலாம். இந்த நிகழ்வில் பெருமளவு விசுவாசிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

படங்கள்: கிளிநொச்சி குறூப் நிருபர் தமிழ்ச்செல்வன்

## ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்புத் திருவிழா

### திருச்சபை எதிர்வரும் ஞாயிறன்று சிறப்பிக்கின்றது



கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுதலின் பின்னர் அவர் பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் விண்ணேற்புத் திருவிழாவாக சிறப்பிக்கப்படுகிறது.

கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுதலின் பின்னரான சம்பவங்களுள் அவரை தெய்வீகத் தன்மை பொருந்திய ஒருவராகவும் இறைவாக்கின்படி இறைமைந்தனாகவும் திருவிவிலியத்தால் வெளிப்படுத்தப்படுவதுபோல் திருச்சபை பாரம்பரியத்தினுள் காணப்படுவது இந்த 'விண்ணேற்புத் திருவிழா'

கிறிஸ்துவின் பிறப்பும் திருப்பாடுகளும் உயிர்ப்பும் கிறிஸ்தவ மக்களிடையேயும் திருச்சபைகளிடையேயும் முக்கியத்துவப்படுத்தப்படுமளவிற்கு ஒப்பீட்டளவில் கிறிஸ்துவின் விண்ணேற்றமானது எந்தளவிற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படுகின்றது என்பது கேள்வியே.

கிறிஸ்துவின் விண்ணேற்றமானது உலகளாவிய ரீதியில் நோக்கப்படாமையானது அது பற்றிய விளக்கமின்மையே காரணமாகும்.

உண்மையில் கிறிஸ்துவின் பிறப்பிலும் உயிர்ப்பிலும் காணப்படும் தெய்வீகத் தன்மையின் முழுமையை எடுத்துக் காட்டுவதே இறைமகனின் விண்ணேற்றமாகும்.

கூடவே இறைமகனின் போதனையின் அடிப்படையிலான திருவிவிலியத் தகவலின்படி இறைமகனின் இரண்டாம் வருகைக்கான உறுதிப்பாட்டின் சம்பவமாக நோக்கப்படும் செய்தியாகவும் விண்ணேற்ற நிகழ்வு அமைகின்றது.

மிக முக்கியத்துவம் கொடுக்கப்படாவிட்டாலும் கிறிஸ்துவின் பிறப்பு,உயிர்ப்பு என்பவை போன்று பல்வேறு இறையியல் செய்திகளை உள்ளடக்கி விண்ணேற்ற நிகழ்வு அமைந்துள்ளது.

மரணத்தின் பின் கல்லறையில் வைத்துக் காவல் செய்யப்பட்ட இறைமைந்தன் இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்த சம்பவமானது ஆழ ஊடுருவிச் சென்ற செய்தியாக அமைய உயித்தெழுந்த இறைமகன் கிறிஸ்து உயிர்த்து நாற்பதாம் நாளிலே தம் பதினொரு சீடர்களுக்கும் முன்பாக மேகங்களூடே உயர வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். இது அமைதியாக காணப்படும் ஆழமான சத்தியத்தை உள்ளடக்கிய செய்தியாகும். உயிர்த்த கிறிஸ்துவின் கல்லறையைப் பார்க்கச் சென்ற மகதலேனா மரியா உள்ளிட்ட பெண்களுக்கு முதல் தடவையாகவும் தொடர்ந்து பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தம்மோடிருந்த சீடர்களின் தமது உயிர்ப்பு தொடர்பான ஐயப்பாட்டை நீக்கவும் அவர் காட்சி தந்தார்.

தமது உயிர்ப்பின் நற்செய்தியைப் பறைசாற்றும் பணிக்கென சீடர்களை அனுப்பவும் தமது தூலஉடலோடு காட்சியளித்ததுமன்றி பாடுகளின் திருக்காயங்கள் மூலமாகவும் இறைவாக்கினர்களின் தம்மைக் குறித்ததான திருமறைக் குறிப்புக்கள் மூலமாகவும் தம் உயிர்ப்பையும் இறை தன்மையையும் தெளிவுபடுத்தியிருந்தார்.

திருவிவிலிய ஆய்வாளர்களது கருத்தின்படி உயிர்த்தெழுந்த இறைமகன் இயேசுகிறிஸ்து உயிர்ப்பின் முதல் தரிசனத்திலிருந்து பரமேறிய திருக்காட்சிவரை எல்லாமாக பதினொரு தடவைகள் தனக்கு அன்பானவர்கள் மற்றும் சீடர்கள் முன் தமது திருவுடலுடன் தோன்றி யதாக குறிப்பிடுகின்றனர்.

பிதாவின் சித்தத்தினை நிறைவேற்றவென மானிடனாய் அவதரித்த இறைவன் தனது பூலோகப் பணியின் முழு நிறைவேற்றத்தினடையாளமே பரமேறுதலாகும்.

தந்தையாம் இறைவனின் சித்தத்தினை சிறப்பாக பூமியில் நிறைவேற்றி முடித்ததுமல்லாமல் தாம் நிறைவேற்றிய மீட்பின் பணியை சுவிஷேசமாக அறிவித்து அனைவரையும் வாழ்வடையச் செய்யும் பணியை தம் சீடர்களிடம் ஒப்படைத்துவிட்டு பரமேறிச் சென்று தமது தந்தையாம் இறைவனது வலது பக்கத்தில் அமர்ந்தார் என திருவிவிலியம் சான்று பகர்கின்றது(மாற்கு 16:19).

அத்தோடு மானிட மகனான திருக்குமாரனின் பூலோக சஞ்சாரம் முழுமை பெறுவதே பரமேறும் திருநாளாகும்.

இறை மகனின் விண்ணேற்றத்தினை சிறப்புறச் செய்யும் இரு முக்கிய விடயங்கள் திரு விவிலியத்தில் தொடர்புபடுவதன் அடிப்படையிலும் இறைமகனின் பரமேறுதல் முக்கியத்துவம் பெறுகின்றது.

மானிடமகன் தமது திருப்பணிக் காலத்திலே வாக்களித்த தூய ஆவியை மாம்சமானவர்களுக்கு அருளல் மற்றும் பூமியின் இறுதி நாளிலே நியாயத் தீர்ப்பிற்கான இரண்டாம் வருகை இவையிரண்டும் இடம்பெற வேண்டுமானால் மானிட சஞ்சாரம் முற்றுப் பெறவும் திருமைந்தன் தந்தையாம் இறைவனிடம் திரும்பிச் செல்ல வேண்டுமென்பதற்காக விண்ணெய்தினார்.

இவ்வாறு விண்ணேற்றமடைந்த திருமைந்தன் தமது திருவாக்கின்படி விண்ணேற்றமடைந்து பத்தாம் நாள் பெந்தகொஸ்தே தினத்தன்று கூடியிருந்தவர்களுக்கு தூய ஆவியை அருளி தமது வாக்கை நிறைவேற்றியிருந்தார்(திருத்தூதர் பணி 2:4).ஆக ஆவியானவரின் அருளுக்கு அடிப்படையாக இறைமகனின் விண்ணேற்றம் அமைந்திருந்தது. பரமேறுதலின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தும் மற்றுமொரு விடயம் உலகத்தினை நியாயம் தீர்ப்பதற்கான இறைமைந்தனின் மீள்வருகையாகும்.இம் மீள்வருகையின் செய்தியானது இயேசு கிறிஸ்துவின் பூலோக திருப்பணிக் காலத்தில் அவரது போதனைகளுக்கூடாக வெளிப்படுத்தப் பட்ட அதேவேளை பரமேறுதல் காட்சியின் போது வெளிப்படுத்தப்பட்ட கருத்தியல் தன்மைக்கு சான்று பகர்ந்திருந்தது.

'கலிலேயரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டே நிற்கிறீர்கள்?இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததைக் கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார் என்றனர்.(திருத்தூதர் பணிகள்1,11)

இயேசு கிறிஸ்துவின் இறை தன்மைக்குச் சான்று பகர்கின்ற இறைமகனின் விண்ணேற்புத் திருவிழா எதிர் வரும் ஞாயிறு தினத்தில் திருச்சபைகளினால் நினைவு கூரப்படுநகிறது. விண்ணேற்புத் திருவிழா உலகிற்கு உணர்த்தி நிற்கும் செய்தி இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த இறைவன் மாத்திரமல்ல என்று முள்ள அனைத்து மக்களுக்குமான இறைவன் அவர் பூமியை நியாயம் தீர்க்க மீண்டும் வருவார் என்பதாகும்.



குழந்தைவேலு சற்குணானந்தன்,
அக்கரைப்பற்று

# கண்டி நித்தவளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பெருவிழா

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

கண்டி நித்தவளையில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி பெருவிழா இன்று 07ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு பால் குட பவனி நடைபெறவுள்ளது.

இந்த பால்குடபவனி, சிவ நாக பூசணி அம்மன் ஆலயத்திலிருந்து புறப்படவுள் ளது. இந்த புனித நீர்கூட பவனியைத் தொடர்ந்து விசேட ஹோமம், விசேட திரவிய அபிஷேகம் மகேஸ்வர பூஜை என்பன நடத்தப்பட்டு பக்தர்களுக்கு அன் னதானம் வழங்கப்படும் மாலை 4.00 மணி முதல் மாவிளக்கு பூஜை, திருவூஞ் சல் மற்றும் வசந்த மண்டப பூஜையுடன், அம்பிகை நகர் வலம் வருதல் இடம்பெ றும்.

எதிர்வரும் 09.05.2024ஆம் திகதி வைபவ வடைமாலை பூஜையும் எதிர்வ ரும் 11.05.24ஆம் காலை 8. 00 மணி முதல் ஸ்ரீ மஹா முனிஸ்வரர் விசேட பூஜையும் நடைபெறவுள்ளது.

# "MSC" விளையாட்டுக் கழக, "நமக்காக நாம்" அமைப்பு விளையாட்டு விழா




வத்தளை " எம்எஸ்சி" விளையா ட்டுக் கழகமும் (MSC Sports Club) "நமக் காக நாம்" அமைப்பும் ஒன்றிணைந்து வருடாந் தம் நடத்தும் தமிழ், சிங்கள புத்தாண்டு விளையாட்டு விழாவும் அன்னையர் தின விழாவும் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணி முதல் வெலிசர நவலோக விளையாட்டு மைதானத் தில் நடைபெறவுள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் நடத்தப்படும் இவ்விழாக்களில், வத்தளையில் வசிக் கின்ற தமிழ் குடும்பங்கள் பல பங்குபற் றவுள்ளன.

இவ்விளையாட்டு விழாவில், தற்போ தைய விளையாட்டிப் போட்டிகள் பலவும் பாரம்பாரிய விளையாட்டுப் போட்டிகள் பலவும் நடத்தப்படவுள்ளன. வத்தளை யில் வாழ்கின்ற சிறுவர், சிறுமியரும் பெற்றோர்களும் பங்குபற்றவுள்ளார்கள்.

# இன்றைய பலன்கள்

## (07.05.2024)



**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா**
**(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**



**மேஷம் :** சுப செலவுகள் அதிகரிக்கும். பணப்பற்றாக் குறை ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்க ளுக்கு உண்டு.

**ரிஷபம் :** கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பெற்றோர் உடல் நலனில் கவனம் தேவை. வாரிசுகளின் வளர்ச்சி மகிழ்ச்சி தரும்.

**மிதுனம் :** குடும்ப ஒற்றுமை பலப்படும். தொழில் முன் னேற்றம் உண்டு. கடன் சுமை குறையும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**கடகம் :** பெண்களுக்கு குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கணவன் மனைவி இருவரும் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். பணம் வந்த மறுநிமி டமே செலவாகிவிடும்.

**சிம்மம் :** பெண்களுக்கு மனக்கலக்கம் அதிகரிக்கும். தொழில் கூட்டாளிகளால் பிரச்சினை வரலாம். ஆதாயம் குறைவாகவும் அலைச்சல் கூடுதலாகவும் இருக்கும்.

**கன்னி :** பெண்களுக்கு அதிக விரயம் உண்டு. நிம்மதி குறையும். தொழிலைப் பொறுத்தவரை யாரை நம்பியும் எதுவும் செய்ய இயலாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார் வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**துலாம் :** குடும்ப விஷயங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். இடமாற்றம், வீடு மாற்றம் ஏற்ப டும் பணி புரிபவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

**விருச்சிகம் :** உங்களின் திறமைக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியவர்களை கண்டறிந்து ஒதுக்குவீர் கள்.

**தனுசு :** யாரேனும் உங்களுடைய தவறுகளை சுட்டிக் காட் டினால் மாற்றிக் கொள்வது நல்லது. தவறு செய்யாமலேயே நீங்கள் தவறு செய்தாக சிலர் வீண் பழி சுமத்துவார்கள்.

**மகரம் :** தந்தையாருக்கு சின்ன அறுவை சிகிச்சை, மூச்சுத் திணறல், வாயுக் கோளாறால் நெஞ்சு வலி வந்துப் போகும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை இருந்துக் கொண் டேயிருக்கும்.

**கும்பம் :** விட்டுக் கொடுத்து போவது நல்லது. அனுமதி பெறாமல் வீடு கட்டத் தொடங்க வேண்டாம். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். மனத்தாபங்களும் வந்து நீங்கும்.

**மீனம் :** கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிக ரிக்கும். சிலர் தனிக் குடித்தனம் செல்வீர்கள். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு நல்ல விதத்தில் முடியும்.

# இராதாகிருஸ்ணன்MPயின்அழைப்பில் ரவிசங்கர் குருஜி இலங்கை வரவுள்ளார்

**நுவரெலியா நிருபர்**



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நுவரெலியா சீத்தா எலிய சீதையம்மன் ஆலயத் தில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற வுள்ள கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வாழும் கலை பயிற்சியின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் குருஜி எதிர்வரும் 18 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

வாழும் கலை பயிற்சியின் நிறுவ னர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி தனது வருகையை உறுதி செய்துள்ளதாக சீதைம்மன் ஆலய அறங்காவலர் சபை தலைவரும் நுவரெலியா மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரி விக்கையில் நானும் எங்களுடைய ஆல யத்தின் நிர்வாக சபை உறுப் பினர்களும் கடந்த மாதம் இந்தியாவின் பெங்களூர் நக ருக்கு விஜயம் செய்து வாழும் கலை பயிற்சியின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியை அவருடைய ஆசிரமத்தில் சந் தித்து எங்களுடைய ஆலய கும் பாபிஷேக நிக்ழவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பிதழ் வழங்கி னோம்.

குருஜி அழைப்பிதழை பெற்றுக் கொண்டு தன்னுடைய வருகையை மிக விரைவில் உறுதிப்படுத்துவதாக எங்களி டம் தெரிலித்திருந்தார்.

அதற்கு அமைய அவர் தற்பொழுது தான் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதை உறுதி செய்துள்ளார். எனவே நாம் அவரை வரவேற்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வரு கின்றோம்.

# இன்று கூடும் பாராளுமன்றத்தில் பாராட்டே சட்டமூலம் விவாதம்

பராட்டே சட்டத்தை டிசம்பர் 15 வரை தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கும் திருத்தச் சட்டமூலம், இரண்டாம் மதிப் பீட்டு விவாதம் இன்று பாராளுமன் றத்தில் நடைபெறவுள்ளதாக பாராளு மன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்துள்ளார்.

இன்று காலை 10.30 முதல் பிற் பகல் 5.00 மணி வரை பிரிவிடல் திருத்தச் சட்டமூலம் பராட்டே சட்டத்தை 2024 டிசம்பர் 15ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கும் திருத்தச் சட்டமூலம், இரண்டாம் மதிப் பீடு என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

பாராளுமன்றம் இன்று (07) முதல் (10) வரை கூடவுள்ளதாக செயலா ளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார். இதில், பல்வேறு சட் டமூலங்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இன்று காலை 10.30 வரை, வாய்மூல விடைக்கான கேள்விகளுக் காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் முதல் முறையாக...

பிரபல சிங்கள மொழி செய்தி வாசிப் பாளர்களான சமிந்த குணரத்ன மற்றும் நிஷாதி பண்டாரநாயக்க ஆகியோர் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட் பத்தை பயன்படுத்தி செய்தி வாசிக்கும் வகையில் இது, வடிவமைக்கப்பட்டுள் ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை (05) இச் செய்தி வாசிப்பாளர்கள் அறிமுகம் செய் யப்பட்டனர். நாட்டில் சிங்கள மொழியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட் பத்தை (AI) பயன்படுத்தி செய்தி ஒளிபரப் பப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

## மானிய நிதி...

செய்ததாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது. குறிப்பாக நெல் உற் பத்திக்கான ஆரம்ப பணிகளை பூர்த்தி செய்துள்ள விவசாயிகளுக்கு இந்த நிதி நிவாரணம் வழங்கப்பட உள்ளது.

எம்.ஓ.பி உரத்தை பயன்படுத்துவது தொடர்பாக விவசாயத் திணைக்களம் வழங்கிய பரிந்துரைகளுக்கு அமைவாக, இந்த உரத்தின் பயன்பாட்டை பிரபலப் படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், இதனால் எம்.ஓ.பி உரத்தை கொள்வனவு செய்வதை இலக்காகக் கொண்டு இந்த உர மானிய நிதியை வழங் குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு, விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத் தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளார்.

## தேசிய படைவீரர் நினைவு மாதம்...

குரூரமான பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில், ஏராளமான முப் படைகளின் இராணுவ வீரர்கள் நாட்டுக்கு உயிர்த் தியாகம் செய்ததுடன், பெருமளவு இராணுவ வீரர்கள் காயமடைந்தனர்.

வருடாந்தம் மே மாதம் முதல் வாரத் தில் முப்படைகளின் தளபதி ஜனாதிப திக்கு தேசிய படைவீரர் கொடி அணிவித்து படைவீரர்களின் மாதம் அனுஷ்டிக்கப்படு கிறது.

## நிதியியல் மோசடிகள்...

இலங்கை மத்திய வங்கி பொது மக்களுக்கு விடுத்துள்ள விசேட அறித்தலில் மேலும் தெரிவித்துள்ளது.

## 2022 GCE O/L...

www.doenets.lk அல்லது www.resulte.exams.gov.lk என்ற இணைய தளத்தினூடாக பரீட்சை பெறுபேறுகளை பார்வையிட முடியும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள் ளது.

## பரீட்சை எழுத முன்னர்...

பலாங்கொடை பின்னவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மாரதென்னையை சேர்ந்த மாணவன் ஹரிநாத் ரஞ்சித் குமாரின் திடீர் மறைவுச் செய்திச் செய்தியை கேள்வியுற்றவுடன் பலாங்கொடை ஆதார வைத்தியசா லைக்கு நேரடியாக பாராளுமன்ற உறுப் பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோ சகருமான வடிவேல் சுரேஷ் விஜயம் செய்தார்.

## 11 அபிவிருத்தி திட்டங்களை...

கேகாலை, உட்பட நாடளாவிய 11 பிரதேசங்களில் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

## GCE O/L பரீட்சை...

எதிர்வரும் 15 வரை நாடளாவிய ரீதியில் உள்ள 3527 பரீட்சை நிலையங் களில் நடைபெறுகிறது.

இம்முறை கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சைக்கு 4,52,979 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

## குழந்தைகளை பணயக்கைதிகளாக்கி...

படையினர் ஒன்பது மணி நேரத்தின் பின்னர் குழந்தைகளை மீட்டெடுத்ததுடன், கணவரையும் கைது செய்தனர். இச்சம்ப வம் பற்றித் தெரிய வருவதாவது:

மனைவியுடன் முரண்பட்டு கோபம டைந்து துபாயில் பணிபுரிந்த இந்நபர்,நாடு திரும்பிய பின் ஹன்வெல்ல ஜல்தர பகுதி யில் அமைந்துள்ள அரச ஊழியர் வீட்டுத் தொகுதி க்கு பொருட்களை விநியோகிக்கும் கூரியர் நிறுவனத்தின் பிரதிநிதியாக சென் றுள்ளார்.

கையில் வெடி குண்டுடன் வந்த கணவரை அவதானித்த மனைவி அவச ரமாக குழந்தைகளை அறைக்குள் தள் ளிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார். மனைவி தப்பிச் சென்றதால் ஆத்திம டைந்த கணவர், தனது பத்து வயது மக ளையும், ஒரு வயதும் எட்டு மாதமுமான மகனையும் பணயக் கைதிகளாகப் பிடித்து, இரண்டு குழந்தைகளுடன் கைக்குண்டை வெடிக்கச் செய்வதாக அயலவர்களை மிரட் டியுள்ளார்.

பொலிஸ் அவசர இலக்கத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்த னர்.

## கடும் வரட்சியால்...

646 குடும்பங்களைச் சேர்ந்த 02ஆயிரத்து 702 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் 02 ஆயிரத்து 280 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## கெஹெலிய உட்பட...

கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறிய லில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய தினம் இது தொடர்பான வழக்கு மாளிகாகந்த நீதவான் நீதிமன் றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டது. இதன்போதே நீதிவான் அந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## “Industry EXPO 2024”...

முதலாவது சர்வதேச மாநாடு மற்றும் “Industry Green Awards” விருது வழங் கும் விழா நடைபெறவுள்ளதா கவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பதிரண இதனைத் தெரிவித்தார்.

## சோமாலியாவில்...

தேவானந்தா தெரிவித்துள்ளார். கடந்த சில மாங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து லொரென்சோ புத்தா04 எனும் ஆழ்கடல் மீன்பிடிப் படகில், கடற்றொழில் மேற்கொள் வதற்காக புறப்பட்ட 06 இலங்கை மீனவர்கள் சர்வதேச கடற்பரப்பில் வைத்து சோமாலியக் கடற்கொள் ளையர்களால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டனர். இலங்கை அதி காரிகள் துரிதமாக செயற்பட்டதன் காரணமாக சீசெல்ஸ் கரையோரக் காவற் படை மற்றும் கடற்படையின ரால் இம் மீனவர்கள் மீட்கப்பட்டனர்.

தற்போது சீசெல்ஸ் துறைமுகத் தில் தங்க வைக்கப்பட்டுள்ள இம்மீ னவர்கைளை இலங்கைக்கு அழைத் துவருவதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி நேற்று (06) மீனவர்களின் உறவினர்கள் அமைச்சரைச் சந் தித்து முறையிட்டனர். இதன் போது அமைச்சர் மேலும் தெரிவித்ததா வது, லொரென்ஸோ புத்தா 04 மீனவர்களை அழைத்து வருவதில் ஏற்பட்டுள்ள தாமதத்துக்காக நான் வருத்தமடைகிறேன். இது போன்ற சம்பவமொன்றுக்கு இலங்கை முதல் தடவையாக முகங்கொடுத்துள்ளது. இதனால், இதிலுள்ள சட்டச் சிக்கல் களைத் தீர்த்து வைப்பதற்கு இரு நாட்டு அதிகாரிகளுக்கும் கால அவ காசம் தேவையாக உள்ளது. எமது கடற்றொழிலாளர்களை மீட்பதற் கான அனைத்து இராஜதந்திர மட்டத் திலான ஏற்பாடுகளும் பூர்த்தியடைந் துள்ளன. எதிர்வரும் சில நாட்களில் அவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்படுவர். இவர்களை விடுவிப்பது தொடர்பில் அமைச்சரவைல் பல முறை பேசியுள்ளேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோச னையின் பிரகாரம் வெளிவிவகார அமைச்சுக்கும் உரிய அலோசனை கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால், இவர்களை எதிர்வரும் சில நாட்க ளில் இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## அமைச்சரவை, பாராளுமன்றின்...

செய்தியாளர் சந்திப்பிலே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது விமான நிலையத்தில் On Arrival விசா வசதி தொடர்பான சர்ச்சைக்குரிய நிலைமை தொடர்பில் அமைச்சர் டிரான் அலஸ் ஊட கவியலாளர்களுக்கு தெளிவு படுத்தினார். அத்துடன் 05 சிறப்பு நிபுணர்களைக் கொண்ட குழு வொன்று சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விசா வழங்கும் முறைமையை ஆராய் வதற்காக வருகை தரவுள்ளதாகவும் அமைச்சர் தெரி வித்துள்ளார்.

அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கை யில், புதிய விசா முறை தொடர்பான பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதமின்றி 2023 நவம்பர் 23இல், ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. விசா கட்டண விவகாரமும் அதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களின் ஒரு பகுதியாகும்.இதுவரை காலமும் 30 நாட்களுக்கு வழங்கப்பட்ட விசா முறைமையை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 17 பகுதிகளாக வேறுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற் கமைய 30 நாட்களுக்காக வழங்கப்படும் விசா இரண்டு முறைக்கு வருகை தரும் வகையில், ஆறு மாத காலத்துக்கு வழங்கப்பட்டது. அது தவிர ஒரு வருடம்,ஐந்து வருடம் என பல்வேறு பகுதிகளாக விசா வழங்கும் முறைமை அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.

இப்புதிய யோசனை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக் கப்பட்டு விவாதமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட் டது. இரு முறை வருகைக்காக 06 மாத காலத்துக்கு வழங்கப்படும் விசாவுக்கு 75 டொலர் அறவிடப்படு கிறது .

இது தொடர்பிலேயே தற்போது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.இந்த தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனை யில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட வேண்டும்.அதேபோன்று 30 நாட்களுக்கு மாத்தி ரம் வழங்கப்படும் விசாவுக்கு 50 டொலர் மாத்திரம் வழங்கப்படும்.இதற்கான திருத்தமும் சபையில் முன் வைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்க ளுக்கு விசா விநியோகிக்கும் பொறுப்பு வி.எப்.எஸ். நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப் படுகிறது. எனினும் அது உண்மைக்குப் புறம்பான தகவலாகும். அந்த வகையில் வலையமைப்பு, முகவர் சேவை மற்றும் பதிவு உள்ளிட்ட விடயங்கள் மாத்திரமே இந்த நிறுவனத்தின் ஊடாக முன்னெடுக் கப்படுகிறது. புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி விசா விநியோகிப்பதற்கு கடந்த நான்கு ஆண்டுக ளாக முன்னெடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந் துள்ள நிலையிலேயே, மேற்படி நிறுவனம் தமது யோசனையை முன்வைத்திருந்தது.

2023.09.08 ஆம் திகதி அமைச்சரவைப் பத்தி ரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன். இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் 2023.09.11 ஆம் திகதி குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு 2023 செம்டம்பர் முதல் டிசம்பர் மாதம் வரை வி.எப்.எஸ்.நிறுவனத்துடன் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்து டிசம்பர் மாதத் தில் அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கை யுடன் இரண்டாவது. அமைச்சரவை பத்திரத்தை 2023.12.04 ஆம் திகதி அமைச்சரவைக்கு சமர்ப் பித்தேன். அதற்கு கடந்த வருடம் டிசம்பர் முதலாம் திகதி அனுமதி வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த நிறுவனத்துடன் 2023.12.21 இல், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட் டது. இந்த நிலையில் அமைச்சரவையினதும்,பா ராளுமன்றத்தினதும் அனுமதி இல்லாமல் விசா கட்டணம் அதிகரிக்கப்பட்டது என்றும் வெளிநாட்டு நிறுவனத்துக்கு அதற்கான அனுமதி வழங்கப்பட் டுள்ளது என்றும் குறிப்பிடுவது அடிப்படையற்ற கூற்றாகும். அந்த வகையில் விசா கட்டணம் அதிக ரிக்கப்பட்டமை மற்றும் வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டமையை தாம், அறியவில்லை என்று அமைச்சர்கள் தெரிவிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் சேவையை தேசிய நிறுவனம் முன்னெ டுத்தபோது குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மாதாந்தம் சுமார் 20 இலட்சம் ரூபாவை செலவிட நேர்ந்தது. எனினும் வி.எப்.எஸ்.நிறுவனத்தின் ஊடாக இந்த சேவையை முன்னெடுக்கும் போது மக்களின் பணத்திலிருந்து ஒரு சதமேனும் செலுத்த வேண்டியதில்லை. வெளிநாடுகளிலிருந்து இலங் கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் புதிய நிறுவனத் தின் ஊடாக சேவையைப் பெற்றுக் கொள்ளும் போது, 18.50 டொலர் சேவை கட்டணத்தையே செலுத்த வேண்டும்.பிற நாடுகளுக்கு இலங்கையர் கள் செல்லும் போது விசாவுக்காக சேவை கட்டணம் அறவிடப்படுகிறது. வி.எப்.எஸ்.குளோபல் நிறுவனம் கடந்த முதலாம் திகதி முதல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தனது சேவைகளை முன்னெடுத்துள் ளது. இதன்போது வழமைக்கு மாறாக வரிசைகள் நீண்டன.இந்த நிறுவனம் சேவையை முன்னெ டுக்கும் போது இணையத்தள வசதிகளை விமான நிலைய தரப்பினர் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. அதுவரை செயற்படுத்தப்பட்ட வழிமுறையையும் இடைநிறுத்தியுள்ளனர். முன்னர் இருந்த செயன்மு றை,புதிய செயன்முறை ஆகிய இரண்டையும் கட்டம் கட்டமாக செயற்படுத்துமாறு பொதுமக்கள் பாது காப்பு அமைச்சின் செயலாளர் ஆலோசனை வழங்கி யும் விமான நிலைய தரப்பினர் அதனை கவனத்திற் கொள்ளவில்லை.

அந்த வகையில் அவர்களுக்கு எதிராகவும் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.


## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள்,**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**மாவட்ட செயலகம் – அம்பாறை**

### கணனிகள் மற்றும் ஸ்கேனர்களின் பெறுகை

2024 உறுமய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளதும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குறிப்பான உருப்படிகளின் ஏக மற்றும் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அம்பாறை நிருவாக மாவட்ட, மாவட்ட செயலாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| தொ.இல. | சாதனங்களின் பெயர் | அலகுகள் |
|---|---|---|
| 01 | Desktop Computers with UPS | 24 |
| 02 | Multifunctional Printer (Printer, Photocopier, Scanners) | 22 |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அம்பாறை, மாவட்ட செயலக பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று 2024.05.07 ஆம் திகதியிலிருந்து 2024.05.29 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
3. 2024.05.07 ஆம் திகதியிலிருந்து 2024.05.29 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 2,000 ரூபாவை செலுத்திய பின்னர் அம்பாறை, மாவட்ட செயலக பிரதான கணக்காளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
4. அனைத்து விலைமனுக்களும் 17,000 இ.ரூபா பெறுமதியில் மாத்திரம் (17,000 இ.ரூ. மாத்திரம்) விலைமனுப் பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது 2024.08.30 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2024.05.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், அம்பாறை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர்கள்/ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும். மேலும், மாவட்ட செயலாளர் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது எந்தவொரு விலைமனுவையும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளதுடன் மாவட்ட செயலாளரானவர் எந்தவொரு ஆகுசெலவையும் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரினால் விலைமனுக்களை தயாரித்தல் மற்றும் விநியோகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு செலவினத்திற்கும் எந்தவொரு பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள மாட்டாது.
7. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர் மேலதிக தகவலை அம்பாறை, மாவட்ட செயலக கணக்கிடல் அலகிலிருந்து அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் ) பெற்றுக் கொள்ளலாம். 0632222233, 0632224458.

**மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம்,**
**அம்பாறை.**

# வெளிநாடொன்றில் 13 கோடி மக்கள் மனதில் இடம் பிடித்த இலங்கை இளைஞனின் காணொளி






இலங்கையில் பூக்கொத்துக்களை விற்கும் இளைஞர் ஒருவரின் காணொளி சீனாவில் 130 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களை கவர்ந்து சாதனைப்படைத்துள்ளது.

குடும்பத்தை கவனிக்கும் பொறுப்பு காரணமாக அன்றாட செலவுக்காக கம்பளை - நுவரெலியா வீதியில் பூக்கொத்துக்களை விற்கும் வியாபாரியான திலிப் மதுசங்க என்பவரின் காணொளியே இவ்வாறு பாராட்டுக்களை பெற்றுள்ளது. கொத்மலையைச் சேர்ந்த ஏழ்மையான குடும்பத்தின் மூன்றாவது பிள்ளையான இவர் 8 வருடங்களாக நாள்தோறும் 15 கிலோமீற்றர் வரை பூக்கொத்துக்களை கையிலேந்தியபடி வெளிநாட்டு பயணிகளை ஏற்றிச்செல்லும் வாகனத்திற்கு தன் ஒட்டத்தை ஈடுசெய்து அவற்றை விற்றுவருகின்றார்.

வெளிநாட்டு பயணிகளிடம் அப்பூக்கொத்துக்களை விற்று கிடைக்கும் பணத்தில் தன் குடும்பத்தின் அன்றாட செலவுகளை கவனித்து வருகிறார். இந்நிலையில் அண்மையில் இலங்கை வந்திருந்த சீன பெண்ணிற்கு பூக்கொத்துக்களை விற்பனை செய்த போது அப்பெண்ணின் கமராவில் பதிவான காட்சிகள் இப்போது பல மில்லியன் பார்வையாளர்களை கடந்து சென்றுள்ளது.

மேலும், இவர் பூக்கொத்துக்களை சுமந்து கொண்டு இருக்கும் கார்ட்டூன் சித்திரங்களும் சீனர்களுக்கு மத்தியில் பகிரப்பட்டு பிரபல்யமாகிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# அகில இலங்கை சமாதான நீதவான்களாக நியமனம்



மத்திய மாகாண அரசசேவையில் பணியாற்றும் அதிபர்கள், அரச ஊழியர்கள் என ஒன்பது பேருக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்த்தகுமாரினால் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் வழங்கப்பட்டது.

ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரி அதிபர் சித்திரன் ராஜன், நுவரெலியா கல்வித்திணைக்களம் ISA அதிகாரி செல்வதுரை விக்னேஸ்வரன், அக்கரைப்பத்தனை போற்மோர் தமிழ் வித்தியாலய அதிபர் தேவராஜ் புண்ணியமூர்த்தி, புஸ்ஸல்லாவ சோகம சுகாதார சேவை ஊழியர் திருமதி.பாலகிருஷ்ணன் உதயமனோகரி, தரவலை தமிழ் வித்தியாலயம் அதிபர் செல்லதுரை கணேசராஜா, கார்பெக்ஸ் பாடசாலை அதிபர் பரசுராமன் சங்கர், ரதல்லை கார்லபெக் தமிழ் வித்தியாலய உப அதிபர் ஐயாசாமி முரளிகிருஷ்ணன், புசல்லாவ தபாற்கந்தோர் ஊழியர் சத்தியசீலன் ஜெகதீஸன், ஹைபொறஸ்ட் தமிழ் வித்தியாலய அதிபர் கந்தசாமி கேதீஸ்வரன் ஆகியோருக்கே இவ்வாறு சமாதான நீதவான் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



Matale friends of zahira அமைப்பின் ஏற்பாட்டில் 9வது வருடமாகவும் இம்முறை இரத்ததான முகாம் மாத்தளை ஸாஹிரா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் (5) நடைபெற்றது.Matale work club மற்றும் மேற்படி அமைப்பின் அங்கத்தவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் இரத்ததான முகாமில் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். மாத்தளை ஆதார வைத்தியசாலையின் இரத்தவங்கி பொறுப்பு வைத்தியர் உட்பட வைத்தியர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

படம் மாத்தளை சுழற்சி நிருபர்

## நீரில் மூழ்கி 45 வயது குடும்பஸ்தர் உயிரிழப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

ஹங்குரங்கெத்த பொலிஸ்பிரிவுக்குட்பட்ட அதிகாரிகம பிரதேசத்தில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அதிகாரிகம பிரதேசத்திலுள்ள அம்பேவளை ஓயாவில் நீராடச் சென்ற நபரொருவரே இவ்வாறு நீரில் மூழ்கி

உயிரிழந்துள்ளதாக ஹங்குரனங்கெத்த பொலிஸார் தெரிவித்தனர்.

## மலையக தொழிலாளர் முன்னணி பொதுச் செயலாளராக புஷ்பா நியமனம்



மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்கப்பிரிவான மலையக தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளராக புஷ்பா விஸ்வநாதன் பதவியேற்றுள்ளார். மலையக மக்கள் முன்னணியின் தலைமை காரியாலயத்தில் இடம்பெற்ற நிர்வாக சபை கூட்டத்தின் போது ஏகமனதாக இவர் தெரிவுசெய்யப்பட்டதோடு ஞாயிற்றுக்கிழமையன்று இடம்பெற்ற மலையக மக்கள் முன்னணியின் பேராளர் மாநாட்டின் போது பதவி வழங்கப்பட்டது. மலையக தொழிலாளர் முன்னணிக்கு இவரது 30 ஆண்டு கால சேவை, அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் மேற்படி பதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்

## ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ்



பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் மதுபோதைக்கு எதிரான இயக்கம் நடாத்திய விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனையால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும், சவால்களும் என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை ஒரு சவாலான விடயமாக காணப்படுவதாக இதன்போது உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர்,

போதைப்பொருள் பாவனையால் பெண்கள் அதிகளவில் சவால்களை எதிர்நோக்குகின்றனர். இந்நிலையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. போதைப்பொருளுக்கு எதிரான பிரசாரங்களை செய்வதை விடுத்து, இளைஞர் யுவதிகளை மாற்று செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் திறன்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென ஆளுநர் தெரிவித்தார்.

இதற்காக தனது பணிப்புரைக்கமைய வடக்கு மாகாண விளையாட்டுத்துறை மற்றும் கலாசார திணைக்களம் ஆகியன இணைந்து கிராமிய மட்டத்தில் புதிய செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் வழங்கப்படும் போது சிறந்த மாற்றங்களை எதிர்பார்க்க முடியும். அதற்கமைய நிலையான பொருளாதாரத்தை பெற்றுக்கொள்வதற்கான புதிய திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் போதைப்பொருளானது குடும்பங்களின் அடிப்படையை சிதைத்துக் கொண்டிருக்கும் நிலையில், அதற்கு எதிராக செயற்பட அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# வடக்கின் உதயம்

## யாழ்.மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனக் கலந்துரையாடல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ்.மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனக் கலந்துரையாடல் அண்மையில் யாழ்ப்பாணம் புங்கன்குளம் சந்தியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட குடிசார் அமைப்புக்களின் தலைவி திருமதி தமிழ்ச்செல்வி மதியழகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளன பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது சம்மேளனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# அறிவித்தல்

## பேருவள ரிசோட்ஸ் பீஎல்சி

## (Company No. PB1091 PQ)

### கூறப்பட்ட மூலதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்பு

2007இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59 ஆவது பிரிவு மற்றும் நிறுவனத்தின் அமைப்பு அகவிதிகளின் 13 (2) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எழு நூறு மில்லியனே ஐந்நூற்று நாற்பத்து நான்கு ஆயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஐந்து (700,544,295) முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா நானூற்று அறுபது மில்லியனே அறுநூற்று ஐம்பத்து மூன்று ஆயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு (ரூபா 460,653,154/-) நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனத்தை எழு நூறு மில்லியனே ஐந்நூற்று நாற்பத்து நான்காயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஐந்து (700,544,295) முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா நூற்று இருபது மில்லியனாக (ரூபா 120,000,00/-) குறைக்கப்பட வேண்டும் என அதன் பங்குதாரர்களுக்கு பரிந்துரைப்பதற்கு பேருவள ரிசோட்ஸ் பீஎல்சி ("நிறுவனம்") பணிப்பாளர்கள் சபையால் தீர்க்கப்பட்டது என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

(2023 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகளின்படி) 2023 மார்ச் 31 ஆம் திகதிக்கு நிறுவனத்தின் திரண்ட இழப்புகள் ரூபா நானூற்று எழுபது மில்லியனே தொள்ளாயிரத்து மூவாயிரத்து முந்நூற்று பதினெட்டு (ரூபா 470,903,318/) ஆக இருப்பதோடு மேற்கூறிய அவ்வாறான குறைப்பு நிறுவனத்தின் முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் செய்யாது ரூபா முந்நூற்று நாற்பது மில்லியனே அறுநூற்று ஐம்பத்து மூவாயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு (ரூபா 340,653,154/) அளவான அதன் கூறப்பட்ட மூலதனத்திற்கு எதிரான நிறுவனத்தின் திரண்ட இழப்புகளை நீக்குவதன் மூலம் செயற்படுத்தப்படுவதோடு, அதன் விளைவாக திரண்ட இழப்புகள் ரூபா நூற்று முப்பது மில்லியனே இரு நூற்று ஐம்தாயிரத்து நூற்று அறுபத்து நான்காக (ரூபா 130,250,164/-) குறைக்கப்படும்.

கூறப்பட்ட மூலதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்புக்காக விசேட தீர்மானம் ஒன்றுக்கு பங்குதாரர்களின் ஒப்புதலை பெறும் நோக்கில் 2024 ஜூலை 19 ஆம் திகதி அதிவிசேட பொதுக் குழு கூட்டம் ஒன்றை நிறுவனம் கூட்டவுள்ளது.

**சபையின் ஆணைப்படி**
**கோர்பரேட் மனேஜர்ஸ் அன்ட் செக்ரடரீஸ் (பிறைவெட்) லிமிடெட்**
**பேருவள ரிசோட்ஸ் பீஎல்சி செயலாளர்கள்**
**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 8-1/3, யோர்க் ஆர்கேட் கட்டிடம், லெய்டன் பஸ்டியன் வீதி,**
**கொழும்பு 01.**


# தமிழர்கள் ஒற்றுமையை வெளிப்படுத்த ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

**யாழ்.விசேட நிருபர்**



தமிழர்கள் தங்களது ஒற்றுமையை வெளிப்படுத்த ஜனாதி பதி தேர்தலை பயன் படுத்த வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதி முறைமை கொண்டுவரப்பட்டு ஆறு ஜனாதிபதிகள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு இருக்கின்றார்கள்.

இந்த 6 ஜனாதிபதிகளில் தமிழ் மக்கள் விரும்பி இரண்டு ஜனாதிபதிகளை கொண்டு வந்திருந்தோம். அவர்கள் எங்களுக்கு எதுவுமே செய்யவில்லை. எங்களது இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக எதுவுமே செய்யவில்லை.

இன்னும் இன்னும் நாங்கள் இந்த ஜனாதிபதி வேட்பாளர்கள் என்று வாக்களித்து ஏமாறாமல் எங்களது ஒற்றுமையை நாங்கள் காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது.

வடகிழக்கை சேர்ந்த தமிழ் தேசிய கட்சிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், புலம்பெயர் தேசத்தில் இருக்கும் தமிழ் நலன் விரும்பிகள் என நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்தால், எந்த ஒரு வேட்பாளருக்கும் 50 வீதத்துக்கு மேலே வாக்கெடுத்து வெல்ல முடியாத சூழ்நிலை உருவாகும். அதனால் ஒரு பொது வேட்பாளரொருவர் தற்போதைய நிலைமையில் தேவைப்பாடாக இருக்கின்றது.

அந்தவகையில் அனைத்து தமிழ் கட்சிகளும் வந்திருக்கின்றன

இலங்கை தமிழரசு கட்சி பொது வேட்பாளர் தொடர்பில் தங்களுக்குள் ஒரு முடிவு எடுப்பதற்கு இரண்டு கிழமை அவகாசம் கேட்டிருக்கின்றார்கள். அவர்களும் ஒரு நல்ல முடிவு எடுப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன். அந்தவகையில் தமிழர்கள் தங்களது ஒற்றுமையை காட்டுவதற்கு இந்த ஜனாதிபதி தேர்தலை சரியாக பயன்படுத்த வேண்டுமென அவர் தெரிவித்தார்.



# அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் முப்பெரும் விழா







அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் ஸ்தாபகர் தினம், பேரவையின் 75 ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு நினைவுச் சின்னம் வெளியிடுதல் மற்றும் சுய தொழில் மேம்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் இரு கால்களை இழந்தவருக்கு தள்ளுவண்டி வழங்குதல் போன்ற முப்பெரும் விழா அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் கேட்போர் கூடத்தில் பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில்.... *All Ceylon YMMA Conference Founders Day Function was held on 30/04/2024 at ACYMMAC Auditorium under the patronage of National President Ihsaan A Hameed. NGS Mr Ashif Shukri, Patron Mr Khalid M Farouk, PP Mr Zubayr Hassen, PP Mr Taufeek Zubayr, PP Mr M N M Naphiel, IPP Mr Saheed M Rismy, PP Mr KN Deen, PP Mr Haleem A Azeez, VP'S Mr ARM Ziyad, Mr Amhar Sheriff, Mr A L M Farook, Mr Ali Azee,( Son of Dr A M A Azeez) DD's Mr Ismath Rifdhi, Mr Nazar A Kamil, Mr Abdul Raheem, Special Members Mr Imran Hussain, Mr Rasooldeen, Mr Shibly Hashim, Mr Hilru Siddique ( Chairman City Gardens), Mr Sham Nawas ( National President Muslim League) Mujeeb Moulavy( News Now) Representative from YWMA SRILANKA, Kahatowita YMMA President Mr Gawsul Firdouse* ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



**அகில இலங்கை வை. எம். எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தனது உரையில்;**

இந்த நாட்டில் ஒற்றுமையுடனும் சகோதரத்துடனும் சமூகத்தின் மேம்பாட்டுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி 17 கிளை, வை. எம். எம். ஏ. கிளைகளின் 67 முக்கியஸ்தர்களுடன் அகில இலங்கை வை. எம். எம். பேரவையாக உத்தியோகபூர்வமாகத் தோற்றம் பெற்றது. அந்த ஆரம்ப நிகழ்வில் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் தேசிய தலைவராகவும், லாபீர் காசிம் தேசிய செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அன்று 17 வை. எம். எம். ஏ. கிளையுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த பேரவை இன்று தொடரேச்சியாக பரந்து விரிந்து 178 கிளைகளுடன் செயற்படுகின்றன. 10,000க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் இந்தப் பேரவையில் அங்கத்துவம் வகிக்கின்றார்கள். இந்த இளைஞர்களுடைய பங்களிப்புடன் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். இந்த வை. எம். எம். ஏ. பேரவை 74 ஆண்டுகளை நிறைவு செய்து 75 ஆவது ஆண்டினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் இருக்கின்றோம். இந்தப் பேரவை எமது முஸ்லிம் சமூகத்திற்கு பெரியதொரு பங்களிப்பையும் நல்லாதரவையும் ஆற்றி வரும் ஓர் அமைப்பாக விளங்குவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைக்கின்றேன். 1968 இல் இவ்வமைப்பு பாராளுமன்ற கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது அரசியல் சார்பற்ற ஒரு தொண்டு நிறுவனம் ஆகும். இதன் பதிவு இலக்கம் 31 முதன் முதலாக பாராளுமன்றக் கட்டளைச் சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொடரேச்சியாக கல்வி, பொருளாதாரம் சமூகம் மேம்பாடு என்பவற்றுடன் மார்க்க விடயங்களிலும் கூடுதல் கவனம் செலுத்தி இவ்வமைப்பு பங்காற்றி வருகின்றன. நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுக் காலத்திலும் பொருளாதார நெருக்கடியான காலகட்டத்திலும் எமது வை. எம். எம். ஏ. பேரவையின் மனிதாபிமான உதவிகளின் பங்களிப்பு அளப்பரியவை. கொரோனா காலத்தில் மக்கள் வெளியே வந்து செயற்படாமல் இருந்த காலத்தில் எமது கிளைகளின் ஊடாக ஒவ்வொரு பகுதிகளிலும் சிறந்த முறையில் நாட்டுக்குத் தேவையான சேவையை செய்து கொடுத்தோம் என்று இன்று நான் பெருமையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

பொருளாதார நெருக்கடியான காலத்தில் நாட்டில் சகல மக்களும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியிருந்தனர். சமைத்த உணவுகள் வழங்கி வைத்தல், உலருணவுப் பொதிகள் போன்றவை அவ்வப்போது தேவையைக் கருத்திற் கொண்டு வழங்கி வந்துள்ளோம். இவ்வுதவிகள் இனம் மதம் என்று பாராமல் சிங்கள , தமிழ், கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் வழங்கி வைத்தோம். இதன் போது வசதி உள்ளவர்கள் வசதி இல்லாதவர்கள் அனைவருக்கும் வழங்கி வைத்தோம்.

இது தேசத்தை கட்டியெழுப்புவோம் என்ற செயற்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 30,000 மரக்கன்று நாட்டியுள்ளோம். இவ்வாறு பல தரப்பட்ட சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றோம். நாட்டிலுள்ள தனவந்தர்கள் நலன்விரும்பிகள் எமது அமைப்பின் மேம்பாட்டுக்கு தொடர்ந்து நல்லாதரவையும் ஒத்துழைப்பையும் தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் நம்பிக்கையாளர் சபையின் போசகர் காலித் எம். பாரூக் இங்கு உரையாற்றுகையில்;**

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் செயற் திட்டங்கள் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸுடைய சிந்தனையின் வெளிப்பாடாகவே இருந்து கொண்டிருக்கிறது. கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தேசிய கீதம் கூட அந்நாட்டில் உள்ள வை. எம். எம். ஏ. இன் தேசிய கீதத்தை தழுவியதாக அமைந்துள்ளது.

எமது அமைப்பின் தலைவர்கள் கடந்த காலங்களில் உயர் அரச பதவிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்கள், குறிப்பாகச் சொல்லப் போனால் வெளிநாட்டு உயர் ஸ்தானிகர் பதவிகளிலும் உயர் அரச உயர் பதவிகளிலும் பங்காற்றி செயற்பட்டுள்ளனர். எனவே இவ்வமைப்பு இலங்கை நாட்டுக்கும் எமது சமூகத்திற்கும் பெரும் பங்காற்றி வருகின்றது.

மாளிகாவத்தையில் வசிக்கும் முஹமட் என்பவருக்கு அகில இலங்கை வை. எம். எம். பேரவையினால் சுய தொழில் வாய்ப்புக்காக தள்ளுவண்டியொன்றும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டது.

இரண்டு கால்களையும் இழந்த முஹமட், பொருளாதார நெருக்கடிகளால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலையில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையினால் இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது.

**இது தொடர்பில் பயனாளி முஹம்மட் கருத்து தெரிவிக்கையில்;**

இந்த மாதிரி உதவி கிடைத்தமை என்பது எனக்கு மிக்க சந்தோசம். இப்படி இயலாதவர்களுக்குச் செய்கின்ற உதவிகளை அல்லாஹ் பார்த்துக் கொண்டு தான் இருப்பான். அவர்கள் மேலும் இம்மாதிரி உதவிகளைச் செய்ய அருள் புரிவான். நான் அல்லாஹ்வுக்கு துஆச் செய்கின்றேன். இதை நான் சொல்லும் போது அழுகை வருகிறது. இந்த மாதிரி தள்ளு வண்டி அழகாகச் செய்து தருவார்கள் என்று நான் எதிர்பார்க்க வில்லை.





இந்தக் கரத்தையைச் செய்ய விடாமல் எத்தனையோ தொல்லைகளை ஏற்படுத்தினார்கள். வண்டியைக் கொண்டு வைத்தவுடன் கண்ணாடியை உடைத்து விட்டுச் செல்வார்கள். இப்போது வேறு இடம் ஒன்று தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்த இடத்தில் போட்டு வியாபாரம் செய்யவுள்ளேன் என்று முஹமட் தெரிவித்தார்.

**இது குறித்து பயனாளியின் மனைவி கருத்துத் தெரிவிக்கும் போது;**

என் கணவர்தான் இம்மாதிரியான நிலையில் இருக்கிறார். இது எங்களுக்கு கிடைத்த பெரிய உதவி. வீடு வீடாகச் சென்று பிங்கான் கோப்பை கழுவித்தான் இவ்வளவு நாளும் சாப்பிட்டு வந்தோம். இது பெரிய உதவி. அவர்களுக்கு அல்லாஹ் உதவி செய்ய வேண்டும் என்று அழுது கொண்டு கருத்தினைப் பகிர்ந்து கொண்டார்.



**இது குறித்து பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் கருத்து தெரிவிக்கும் போது;**

சமூகத்தில் கஷ்டமான மக்களைப் பார்த்து சேவை செய்வது என்பது பிரயோசமான விடயம் ஒன்றாகும். ஏனென்று சொன்னால் யாருக்கும் நேர காலத்தை ஒதுக்கி சேவை செய்யலாம். ஆனால் அது சரியான நேரத்தில் சரியானவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். அது கடினமான காரியம். அந்த அடிப்படையில் மாளிகாவத்தைப் பகுதியில் நாங்கள் நோன்பு காலத்தில் உலருணவுப் பொதிகள் வழங்கி வைத்தோம். இதன் போதே இந்தக் குடும்பத்தினர் இனங்காணப்பட்டனர். இம்மாதிரியாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவிகள் வழங்க இப்படியான விடயங்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவி செய்யக் கிடைத்தமையிட்டு நாங்கள் அல்லாஹ்வுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டப் பணிப்பாளர் நஸார் ஏ. காமில் அவர்களின் முயற்சியின் ஊடாக ஒரு செல்வந்தரின் உதவியுடன் குறித்த குடும்பத்தின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புகின்ற வகையில் சுயதொழில் வழிகாட்டலை வழங்கி அதனை நுகர்வோர்களுக்கு விற்பனை செய்வதற்கான பொருட்களுடன் தள்ளு வண்டியினையும் வழங்கியுள்ளோம்.

இந்தப் பயனாளிக்கு வாழ்வாதாரப் பொருள் வழங்குவதன் நோக்கம் இந்தக் குடும்பம் எதிர்வரும் காலங்களில் கஷ்டமான வாழ்க்கையை எதிர்நோக்கக் கூடாது. இதன் மூலம் குடும்ப வருமானத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலே இந்த வேலைத் திட்டம் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையினால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

அதேபோன்று, இன்னும் பல தனவந்தர்களும் எமது அமைப்பான அகில இலங்கை வை. எம்.எம். ஏ பேரவையுடன் இணைந்து இந்த மாதிரியான தேவையுடைவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடுடன் இருக்கின்றனர். இந்த உதவியைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் எதிர்காலத்தில் இதன் மூலம் சிறந்த பயனை அடைய வேண்டும். என்ன நோக்கத்திற்காக உங்களுக்கு உதவி செய்தார்களோ அந்த அவர்களுடைய தூய்மையான நோக்கம் நிறைவேற வேண்டும். ஆகவே அங்கு வழங்கப்பட்ட வாழ்வாதார உதவியுடன் உச்ச பயனை அடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டப் பணிப்பாளர் நஸார் ஏ. காமில் உரையாற்றும் போது;**

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் சமூகப் பணியானது ஒரு திட்டமிட்ட அடிப்படையில் தான் மேற்கொள்ளப்படுகிறது. ஒரு பகுதியில் யார் யார் உதவி பெறத் தகுதியானர்கள் என்பதைத் தெரிவு செய்து தான் உதவி செய்து வருகின்றோம்.

இவ்வேளையில் இந்த தாயார் எங்கள் அலுவலகம் வந்து உதவி கேட்டார். வீதியால் செல்பவர்கள் வந்து உதவி கேட்டால் நாங்கள் உதவி வழங்குவது இல்லை. அவர்களுக்கு உதவி செய்யத்தான் வேண்டும். ஆனாலும் அந்த மாதிரி உதவிகள் வழங்குவதற்கு எங்களிடம் நிதி வசதிகள் இல்லை என்று இந்த நிதி உதவியைக் கேட்டு வந்த தாயிடம் கூறினோம். ஆனாலும் அங்கு இருந்த எங்கள் வை. எம். எம். ஏ. பேரவையின் உறுப்பினர் ஒருவர் 'இந்தத் தாயின் கணவர் இஸ்லாம் மதத்தைத் தழுவியர். அவருக்கு இரு கால்களும் இல்லை. இத்தாய் ஒவ்வொரு கல்யான வீடுகளுக்கும் சென்று பிங்கான் கோப்பைகள் கழுவித்தான் வாழ்கின்றாள்' என்று அவர் தெரிவித்தார். அந்த நேரத்தில் எமக்கு நேரம் இருக்கவில்லை.

அவ்வாறு கோரிக்கை விடுத்த தாயின் வீட்டுக்கு நோன்பு முடித்த பிற்பாடு எங்கள் உறுப்பினர்களுடன் சென்றோம். அவர்களுடைய கருத்து உண்மையாக இருந்தது. அதன் பிறகு எங்கள் அமைப்புக்கு உதவி செய்யக் கூடிய தனவந்தர்களை நாடி விடயத்தைக் கூறினோம். அவர்களும் அதற்குரிய உதவிகளைச் செய்ய முன் வந்தார்கள். அவர்கள் அந்தப் பொறுப்பை நிறைவேற்றிக் கொடுக்குமாறு எங்களிடம் ஒப்படைத்தார்கள். நாங்கள் அந்தப் பொறுப்பை நிறைவேற்றியிருக்கின்றோம். அல்லாமல் நாங்கள் இதைப் படம் எடுத்து விளம்பரப்படுத்த வேண்டும் என்பது எங்களுடைய நோக்க மல்ல. நாங்கள் இவை போல எத்தனையோ செய்கின்றோம்.

இந்த மனிதர் மாளிகாவத்தையில் தள்ளு வண்டியில் பொருட்கள் விற்பனை செய்து கொண்டிருப்பார். அவரிடம் சென்று பொருட்களை வாங்கி அவரின் வாழ்வாதார கட்டமைப்பை வளப்படுத்த உதவி செய்யுங்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**மௌலவி முஜீப் உரையாற்றும் போது;**

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையானது இந்த நாட்டில் இன மத மொழி பிரதேச வேறுபாடுகளின்றி எல்லோருக்கும் சேவை செய்கின்ற ஓர் அமைப்பு என்பது எல்லோரும் தெரிந்த விடயம். பாதிக்கப்பட்டு யாரிடமும் கையேந்தாமல் வாழ்ந்து வந்த குடும்பத்தை அறிந்து அவர்களுடைய வீடு தேடிக் சென்று அவர்களுடைய நிலைமைகளை அறிந்து அவர்களுடைய தேவையை நிறைவேற்ற அகில இலங்கை வை. எம். எம்.. ஏ. பேரவை முன் வந்திருப்பது எவ்வளவோ சந்தோசமான பாராட்டத்தக்க விடயம். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். முஸ்லிம் ஒருவருடைய கஷ்டத்தை, துன்பத்தை நீக்கி வைத்தால் மறுமை நாளில் அல்லாஹ் அவருடைய குறையை நீக்கி வைக்கிறான் என்று ஹதீஸ்கள் உள்ளன. சமூக சேவை என்பது இஸ்லாத்தின் பார்வையிலே மறுமைக்கான நன்மைகளை அள்ளிக் கொட்டுகின்ற ஒரு சந்தர்ப்பமாக இருக்கின்றது.

அப்படியான ஒரு சமூகப் பணியை 75 ஆண்டு காலமாக செய்திருப்பது என்பது ஒரு மிகப்பெரிய வரலாறு. அந்த வரலாற்றில் சிறு துளியைத் தான் இன்றைய தினம் வை. எம். எம். ஏ. நிர்வாகம் இப்பொழுது செய்திருக்கிறது.

அவர்கள் தொடர்ந்து 75 ஆண்டு காலத்தைத் தாண்டியும் பல்வேறு பணிகளை மேற் கொள்ள நாங்கள் பிரார்த்தனை செய்வோம். இந்த உதவியைப் பெற்றுக் கொள்கின்ற குடும்பத்தினர்களுக்கும் நாங்கள் பிரார்த்தனை செய்வோம். அவர்கள் செய்கின்ற இந்த சேவை பகிரங்கப்படுத்தப்படுவது மார்க்க ரீதியாகவும் அனுமதிக்கப்பட்ட ஒரு விசயம். ஒரு நல்ல விசயத்தை பகிரங்கப்படுத்துவதன் மூலம் இந்த விடயத்தை ஏனையவர்கள் செய்வதற்கு தூண்டுவதாக அமையும். பகிரங்கப்படுத்துவற்காக ஊடக வாயிலாக முயற்சிகளை மேற்கொண்ட வை. எம். எம். ஏ. நிர்வாகத்திற்கு நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இக்பால் அலி

# கிழக்கின் குரல்



## தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான காணியில் ஆயுர்வேத மூலிகைத் தோட்டம்

(ஒலுவில் விசேட நிருபர்)



தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 28 ஏக்கர் காணியில் ஆயுர்வேத மூலிகைத் தோட்டம் அமைக்கப்படவுள்ளதாக, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

மாகாண ஆயர்வேத மூலிகை உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் மீள் உற்பத்தி திட்டத்தின் கீழ் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படவுள்ளது. இவ்விடத்தை கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் டொக்டர் எம்.ஏ.நபீல், ஆயர்வேத, சுதேச வைத்தியர்கள் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக துறைசார் அதிகாரிகளும் அண்மையில் சென்று ஆய்வு செய்தனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் ஏற்பாட்டில் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், இந்திய ஆயுர்வேத வைத்திய நிபுணர்களுடன் இணைந்து இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை பொது வைத்தியசாலையுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான திட்ட வரைபுகளும் முன்மொழியப்பட்டுள்ளதாக அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

இலங்கையின் மூலிகை பயிர்களை பாதுகாப்பதுடன், கிழக்கு மாகாணத்திற்குத் தேவையான ஆயுர்வேத மருந்து உற்பத்தியையும் மேற்கொள்ள முடியும்.

இம்மூலிகைத் தோட்டம் அமைக்கப்படும் பட்சத்தில் சுகாதார சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பை வழங்க முடியுமென்றார்.

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள ஒவ்வொரு ஆயுர்வேத வைத்தியசாலைகளிலும் பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசியமான மூலிகைகள் பலவற்றை நடுகை செய்து அவற்றை மக்களுக்கு அறிமுகம் செய்து அதற்கான நாற்றுகளை அவர்களுக்கு பெற்று கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முறக்கொட்டாஞ்சேனை பொது அமைப்புக்களுடன் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் சந்திப்பு!






கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் முறக்கொட்டாஞ்சேனை பகுதியிலுள்ள பொது அமைப்புகளை சந்தித்து கலந்துரையாடினார்.

முறக்கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய நிர்வாகம், கிராம அபிவிருத்திச் சங்கம், இளஞ்சுடர் விளையாட்டு கழகம் உள்ளிட்ட பொது அமைப்புகளை சந்தித்து கலந்துரையாடினார்.

இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தனினால் முறக்கொட்டாஞ்சேனை கிராமத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதோடு, எதிர்காலத்தில் முறக்கொட்டாஞ்சேனை பொது அமைப்புக்கள் அனைத்தும் இணைந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடன் ஒருமித்து செயற்பட உள்ளதாக பொது அமைப்புகள் தமது தீர்மானத்தை இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

அத்தோடு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தொழிற் சங்கத்தினால் உலகத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மே தின நிகழ்வுகளில் முறக்கொட்டாஞ்சேனை கிராமிய பொது அமைப்புகள் பாரிய பங்களிப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பின்போது தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பிரதம பொருளாளர் ஆறுமுகம் தேவராசா, மாவட்ட அமைப்பாளர் அருண் திருநாவுக்கரசு, கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேசக் குழு பொருளாளர் கிருஷ்ணமேனன் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## செங்கலடி பிரதேசத்தில் பஸ் விபத்து; ஐவர் படுகாயம்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியின் செங்கலடி பிரதேச முச்சந்தியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் மட்டக்களப்பு மற்றும் செங்கலடி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 1.45 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனையிலிருந்து 12.45 மணிக்கு மகரகம நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

சாரதியின் தூக்கக் கலக்கமே இவ்விபத்துக்கான காரணமாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

பஸ் வண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின் கம்பத்தில் மோதுண்டு வீதியோரம் இருந்த கடைத் தொகுதியிலும் மோதியுள்ளது. இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பிரதேசங்களுக்கான ஹபரண வழி மின் விநியோகம் சுமார் இரண்டரை மணி நேரம் தடைப்பட்டிருந்தது.

விபத்தில் சாரதி நடத்துநர் பயணிகள் என ஐந்துபேர் படுகாயமடைந்து செங்கலடி மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 'சட்டமும் நீங்களும்' நூல் வெளியீட்டு விழா



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையத்தினால் சிரேஷ்ட சட்டத்தரணி இராமலிங்கம் திருக்குமாரநாதன் எழுதிய 'சட்டமும் நீங்களும்' எனும் நூல் வெளியீட்டு விழா திருகோணமலை லோயோலா பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

## அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் உப தலைவராக அன்வர் தெரிவு

(நிராய்க்கேணி தினகரன் நிருபர்)



அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் உப தலைவராக நிந்தவூர் பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.அன்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் பத்தரமுல்லையில் நடைபெற்றது.

இதன்போது இடம்பெற்ற அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் நிர்வாகத் தெரிவின் போதே உப தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டார்.



திருகோணமலை கந்தளாய் சூரியபுர காட்டுப்பகுதியில் உலகிலேயே மிக அரிதாகவே காணப்படுகின்ற கொம்பு யானையொன்று நடமாடுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அதே நேரம் கந்தளாய் சூரியபுர குப்பை மேட்டை நோக்கி அதிகளவிலான யானைகள் படையெடுத்து வருவதையும் காணமுடிகின்றது. (கந்தளாய் தினகரன் நிருபர்)

## திருகோணமலை வைத்தியசாலை குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கஜேந்திரன் எம்.பி கோரிக்கை

(தம்பலகாமம் குறூப் நிருபர்)



திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை, பல குறைபாடுகளுடன் இயங்கி வருவதாகவும் இதனை சீர் செய்ய சுகாதார அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை அண்மையில் இவர் மேற்கொண்டிருந்தார். இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் காரணமாக வைத்திய நிபுணர்களால் தங்கள் கடமைகளை சரியாக மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக சுமார் 100 ஊழியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதுடன் தாதியர்களுக்கான பற்றாக்குறையும் கணிசமான அளவு நிலவுகிறது. எனவே இவற்றை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும். இதே போன்று பௌதீக வளங்கள் பற்றாக்குறையும் நிலவுகிறது.

அவசர விபத்து சிகிச்சை பிரிவு இங்கு இல்லை மற்றும் இருதய நோய்க்கான கட்டட வசதியும் இல்லை. இங்கு வரும் நோயாளிகள் வெளிமாவட்டங்களுக்கு சென்று சிகிச்சை பெறவேண்டியுள்ளது. எம்.ஆர்.ஐ போன்ற இயந்திர பற்றாக்குறையும் நிலவுகின்றது.

வைத்தியசாலைக்கான விடுதிகளில் சீராக மின்விசிறி கூட இயங்குவதில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதும் விழிப்புலனற்ற மாணவர்கள்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)



கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு விழிப்புலனற்ற மாணவர்கள் தோற்றுகின்றனர்.

மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலையில் கற்கும் ஆண் மாணவர்களே இவ்வாறு பரீட்சைக்கு தோற்றுகின்றன்ர்.

மாணவர்கள் மட்டக்களப்பு சிவானந்த தேசிய பாடசாலை பரீட்சை நிலையத்திலேயே பரீட்சை எழுதுகின்றனர். விழிப்புலனற்றோர் பாடசாலையில் கல்வி கற்ற பல மாணவர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும், பட்டதாரிகளாகவும் கடமை புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## காரைதீவு வைத்தியசாலையில் ரூ.40 இலட்சம் செலவில் தாழ்வாரம்

### அடிக்கல் நாட்டு விழாவில் பணிப்பாளர் ஷகீலா



(காரைதீவு குறூப் நிருபர்)

காரைதீவு வைத்தியசாலையில் சுமார் 4 மில்லியன் ரூபா பெறுமதியான புதிய தாழ்வாரம் (coridoor) ஒன்றுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

காரைதீவு பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் நடராசா அருந்திரன் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஷகீலா இஸ்ஸதீன் கலந்து சிறப்பித்தார்.

பிரதான வீதிக்கு அருகாமையில் உள்ள வைத்தியசாலை காணியில் கட்டப்பட்ட புதிய கட்டடத்தையும் பழைய கட்டடத்தொகுதியையும் இணைக்கும் வகையில் இது அமைக்கப்படவுள்ளது.

இது நிர்மாணிக்கப்பட்ட பின்னர் புதிய கட்டடம் வெளிநோயாளர் பிரிவாக பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் அடிக்கல் நாட்டு நிகழ்வில் வைத்தியர்கள், வைத்தியசாலை பணியாளர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## ரணில் தான் அடுத்த ஜனாதிபதி என்பதை மே தினக் கூட்டம் நிரூபித்துள்ளது

### ஐ.தே.கட்சி அமைப்பாளர் ஆதம்லெப்பை

பாலமுனை தினகரன் நிருபர்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் அடுத்த ஜனாதிபதி என்பதை ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் திரண்ட மக்கள் வெள்ளம் நிரூபித்துள்ளதாக ஐ.தே.கட்சி பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் யூ.கே. ஆதம்லெப்பை தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் நிலையில், அந்தக் கட்சியின் பிரதான மே தினக் கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான மக்களை திரட்டி, வெற்றிகரமானதொரு கூட்டத்தை நடத்தியமை அக்கட்சிக்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏனைய கட்சிகளில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற போதும், ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக்கூட்டத்தைப் போன்றதொரு, மக்கள் நிரம்பிய வெற்றிகரமானதொரு கூட்டத்தை நடத்திக் காண்பிக்க அவர்களால் முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனது தொகுதியிலிருந்து சுமார் 400 ஆதரவாளர்களுடன் கொழும்பில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிவித்த அமைப்பாளர் ஆதம்லெப்பை, "எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாவார் என்பதற்கு, நடந்து முடிந்த மே தினக் கூட்டம் சான்று பகர்ந்துள்ளதாக தெரிவித்தார்.

பொருளாதாரத்தில் வீழ்ந்து கிடந்த நாட்டை குறுகிய காலத்துக்குள் மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தான், இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

### காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில்

## 'சவூதியின் ஒளி' இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



சவூதி அரேபிய மன்னர் சல்மானின் 'நிவாரணம் மற்றும் மனிதாபிமானப் பணிகளுக்கான மன்னர் மையத்தின் (King Salman Humanitarian Aid and Relief Centre) நிதி அனுசரணையில் கண்புரை நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு சிகிச்சையளிக்கும் வேலைத்திட்டம் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் நேற்று ஆரம்பமானது.

இலங்கையில் ஆபிஸ்( AMYS) நிறுவனம் அல் பஷர் சர்வதேச அமைப்புடன் இணைந்து 28ஆவது தடவையாக இலவச கண்புரை சத்திரசிகிச்சை முகாமை இம்முறையும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் நடாத்துகின்றது.

சத்திரசிகிச்சை முகாம் நேற்று தொடக்கம் எதிர்வரும் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன் இதில் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த கண் வைத்தியர்களும் வந்து சத்திர சிகிச்சையை மேற்கொள்ளவுள்ளனர்.

இத்திட்டத்துக்காக நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட பரிசோதனை முகாம்களின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 1000ற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சத்திரசிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். சத்திர சிகிச்சை முகாம் தொடர்பான கலந்துரையாடல் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ்.ஜாபீர் தலைமையில் நடைபெற்றது.

## நிலோனா லொஜஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

**2007 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 59(2) பிரிவிற்கமைய கம்பெனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான பகிரங்க அறிவித்தல்**

கம்பெனியின் பெயர் : நிலோனா லொஜஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
கம்பெனியின் பதிவு இலக்கம் : பீவீ 00207201
கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட விலாசம் : ஒருவல, அதுருகிரிய
குறைப்பின் முன் கூறப்பட்ட மூலதனம் : ரூ. 276,901,000.00
குறைப்பின் பின் கூறப்பட்ட மூலதனம் : ரூ. 174,501,000.00
குறைக்கப்பட்ட பெறுமானம்: ரூ. 102,400,000.00

**சரவணன் நீலகண்டன்**
**பணிப்பாளர்**
**எஸ் என் லோ கார்ப்பரேட் செக்ரட்டரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**
**(கம்பெனியின் கம்பெனிச் செயலாளர்கள்)**
**எச் கியூ கொழும்பு (நிலை 4).**
**இல. 464எ, டி.பி. ஜயா மாவத்தை**
**கொழும்பு - 10**

## நிலோனா லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்

**2007 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 59(2) பிரிவிற்கமைய கம்பெனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான பகிரங்க அறிவித்தல்**

கம்பெனியின் பெயர் : நிலோனா லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்
கம்பெனியின் பதிவு இலக்கம் : பீவீ 14543
கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட விலாசம் : ஒருவல, அதுருகிரிய
குறைப்பின் முன் கூறப்பட்ட மூலதனம் : ரூ. 732,000,020.00
குறைப்பின் பின் கூறப்பட்ட மூலதனம் : ரூ. 618,600,020.00
குறைக்கப்பட்ட பெறுமானம்: ரூ. 113,400,000.00

**சரவணன் நீலகண்டன்**
**பணிப்பாளர்**
**எஸ் என் லோ கார்ப்பரேட் செக்ரட்டரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**
**(கம்பெனியின் கம்பெனிச் செயலாளர்கள்)**
**எச் கியூ கொழும்பு (நிலை 4).**
**இல. 464எ டி.பி. ஜயா மாவத்தை**
**கொழும்பு - 10**

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் – கொழும்பு கிழக்கு

### மீட்கப்படாத அடகு நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி கொழும்பு கிழக்கு பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் பின்வரும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டு 07.06.2024 திகதி வரை மீட்கப்படாததும் புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடக்கம் ஏலத்தில் விற்கப்படும்.

**ஏலவிற்பனை செய்யப்படும் திகதிகள் 08.06.2024 மற்றும் 09.06.2024**

| ஏலவிற்பனை செய்யப்படும் இடங்கள் | பத்தரமுல்ல | கங்கொடவில |
|---|---|---|
| கிளைகள் | அதுருகிரிய, பத்தரமுல்ல, கொலொன்னாவ, கொட்டிகாவத்த, கடுவெல. | மஹரகம, கொட்டாவ, நுகேகொட நகரம், கங்கொடவில, நுகேகொட, பிட்டகோட்டே |
| சேவை நிலையங்கள் | தலுவத்துகொட, மாலபே, ஹோகந்தர, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், வெல்லம்பிட்டிய, கொத்தட்டுவ, முல்லேரியா புதிய நகரம், நவகமுவ, பண்டாரவத்த. | பன்னிப்பிட்டிய, பமுனுவ ஹபரக்கட, மத்தேகொட, கொஹுவல தெல்கந்த, ஜயவர்தனபுர அம்புல்தெனிய, நாவல, ராஜகிரிய, அதுல்கோட்டே, தலபத்பிடிய. |

இந்த ஏலவிற்பனையை மறு அறிவித்தல் இன்றி இரத்துச் செய்ய, ஏலவிற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**இல. 177A, உயர் மட்ட வீதி (High Level Road), நுகேகொட**
**தொலைபேசி இல. 0112812260/0112854189**

PEOPLE'S BANK
Pride of the Nation

## 2025 வரவு செலவுத்திட்ட அபிவிருத்தி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்

## பன்னல பிரதேச சபை

### பொதுமக்களுக்கு விடுக்கும் விசேட அறிவித்தல்

1987 இல. 15 எனும் பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டி வடமேல் மாகாண கௌரவ ஆளுநரின் 2020.10.29ம் திகதி மற்றும் இல. 2199/15 என்ற இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானியில் (அதிவிசேட) பிரசுரிப்பதற்கு இருந்த பிரதேச சபை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தும் விதி இல. 06 இன் பிரகாரம் 2023ம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்திற்காக மூலதன மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டிய அபிவிருத்தி ஆலோசனைகள் 2024 ஜூன் 30 இற்கு முன்பு பன்னல பிரதேச சபையின் செயலாளரான எனக்கு கிடைக்குமாறு தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவிக்கிறேன்.

**J.A.S. ஜயசிங்ஹ,**
**செயலாளர்,**
**பன்னல பிரதேச சபை.**

2024.05.03ம் திகதி
**பன்னல பிரதேச சபையில்**

## லன்வா சன்ஸ்தா சிமெண்ட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

**2007 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 59(2) பிரிவிற்கமைய கம்பெனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான பகிரங்க அறிவித்தல்**

கம்பெனியின் பெயர் : லன்வா சன்ஸ்தா சிமெண்ட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
கம்பெனியின் பதிவு இலக்கம் : பீவீ 125667
கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட விலாசம்: ஒருவல, அதுருகிரிய
குறைப்பின் முன் கூறப்பட்ட மூலதனம் ரூ: 18,335,451,000.00
குறைப்பின் பின் கூறப்பட்ட மூலதனம் ரூ: 17,935,451,000.00
குறைக்கப்பட்ட பெறுமானம்: ரூ: 400,000,000.00

**சரவணன் நீலகண்டன்**
**பணிப்பாளர்**
**எஸ் என் லோ கார்ப்பரேட் செக்ரட்டரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**
**(கம்பெனியின் கம்பெனிச் செயலாளர்கள்)**
**எச் கியூ கொழும்பு (நிலை 4).**
**இல. 464எ, டி.பி. ஜயா மாவத்தை,**
**கொழும்பு - 10**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
   - மூன்று மாதங்களுக்கான பண உள்ளீடுகளுக்கான ஆவணச் சான்றுகள் சகிதம் இந்த ஒப்பந்தத்திற்காக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக்கொடுப்பனவு நீங்கலாக ஏனைய ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளை பூர்த்தி செய்த பின்னருள்ள ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகை 76 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்த கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட (PCA 3) செல்லுபடியாகும் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும். இது ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியாகவிருக்கும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-10, மாளிகாவத்த, புதிய செயலகம், 7ஆம் மாடியிலுள்ள கடற்றொழில் அமைச்சின் உதவிப் பணிப்பாளரிடம் (சமூக அபிவிருத்தி) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024 மே 07ஆம் திகதி முதல் 2024 மே 27ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையும் அதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். தொடர்பிலக்கங்கள்: தொலைபேசி: 0112440579, கைப்பேசி: 0717440862, தொலைநகல்: 0112322416, மின்னஞ்சல் முகவரி: social@fisheries.gov.lk

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 மே 07ஆம் திகதி முதல் 2024 மே 27ஆம் திகதி வரை கடற்றொழில் அமைச்சின் 07ஆம் மாடியில் அமைந்துள்ள அபிவிருத்திப் பிரிவிற்கு மீளளிக்கப்படாத கட்டணமான பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவைச் (ரூபா 12,500.00) செலுத்திய பின்னர் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-10, மாளிகாவத்த, புதிய செயலகம், கடற்றொழில் அமைச்சு, செயலாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணம் அல்லது வங்கி வரைவாக இருத்தல் வேண்டும்.

7. விலைமனுக்களை செயலாளர், கடற்றொழில் அமைச்சு, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு-10 என முகவரியிட்டு 2024 மே 28ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கடற்றொழில் அமைச்சின் 07ஆம் மாடியில் அமைந்துள்ள அபிவிருத்திப் பிரிவிற்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். (91 நாட்கள்)

9. சகல விலைமனுக்களுடனும் ஒன்பது இலட்சத்து எழுபதாயிரம் ரூபா (ரூபா 970,000.00) பெறுமதியுள்ள படிவத்தின் உள்ள 9ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையான படிவத்தில் (விலைக்கோரல் பிணை முறி) கொழும்பு-10, மாளிகாவத்த, புதிய செயலகம், கடற்றொழில் அமைச்சு, செயலாளரின் பெயருக்கு வரையப்பட்ட விலைக்கோரல் பிணைமுறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைக்கோரல் பிணைமுறி 2024 செப்டெம்பர் 24ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கையினுள் செயற்படும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் பெறப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

10. முன்கூட்டிய தள விஜயம் 2024 மே 17ஆம் திகதி இடம்பெறும்.

11. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் பின்வருமாறு இடம்பெறும்.
    திகதி மற்றும் நேரம்: 2024 மே 20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு
    இடம்: கேட்போர் கூடம்,
    5ஆம் மாடி, கடற்றொழில் அமைச்சு,
    புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு-10.

12. முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன் ITB of ICTAD/SBD/01 இரண்டாம் பதிப்பு - ஜனவரி 2007 மற்றும் 2009 ஒக்டோபர் மற்றும் 2011 பெப்ரவரி வழங்கப்பட்ட இணைப்புகளை கவனமாக வாசிக்குமாறு சகல விலைமனுதாரர்களும் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**வட மாகாணத்தினுள் கடற்றொழிலை அபிவிருத்தி செய்தல்,**
**கடற்றொழில் அமைச்சு,**
**2ஆம் மாடி,**
**புதிய செயலகம்,**
**மாளிகாவத்தை,**
**கொழும்பு-10.**

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல :- 4-3/11/2021/CEB/405**

**பிரதேச செயலக குறிப்பு இல :- DS/VAV/ADM/LAND/AO/-CEB/KATH.SK/2022/08/001**

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டை ஒரு பகிரங்கத் தேவைக்கு அரசாங்கம் கையகப்படுத்த உத்தேசித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2024ஆம் ஆண்டு சித்திரை மாதம் 06ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 2378/37-2024ஆம் இலக்க விசேட வர்த்தமானியினைப் பார்வையிடவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | :- வடமாகாணம் |
| மாவட்டம் | :- வவுனியா |
| பிரதேச செயலாளர் பிரிவு | :- வவுனியா |
| கிராம சேவகர் பிரிவு | :- 215 B காத்தார் சின்னக்களம் |
| கிராமம் | :- கறுவல் புளியங்குளம் |
| காணியின் பெயர் | :- குருந்தடிக்காடு |
| கடத்திரல் வரைபட இல | :- 950089, தொகுதி இல 11 |
| காணித்துண்டு இல | :- 2,3,4,5,6,7,8,9,10 |
| விஸ்தீரணம் | :- 6.1314 ஹெக்டயர்ஸ் |

**பிரதேச செயலகம்**
**வவுனியா**
**2024.05.03**

**பிரதேச செயலாளர்**
**வவுனியா**




## சுகாதார சேவைத் திணைக்களம்
# மாவட்ட பொது வைத்தியசாலை மாத்தறை

## ஆய்வுகூட சாதனங்களுக்கான பெறுகைக்கான விலைமனு அழைத்தல்

பின்வரும் உபகரணங்களுக்கான தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| அம்ச இலக்கம் | அம்சங்களின் பெயர்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Fully Automated Haematology Analyzer 7 Part | 01 No. |
| 02 | Laboratory Autoclave | 01 No. |
| 03 | Laboratory Centrifuge | 02 Nos. |

1. விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் அம்சங்களின் விபரமான பட்டியல் மற்றும் விபரக் குறிப்புக்களை பெற்றுக் கொள்ளலாம். பாவனையாளர் பட்டியல், விபரமான கையேடுகள், சேவை கைநூல், விற்பனைக்கு பிந்திய சேவை வசதி மற்றும் கையிருப்பு நிலை ஆகியவை விலைமனுக்கோரல் ஆவணத்துடன் வழங்கப்படல் வேண்டும்.
2. விலைமனுதாரர் பின்வருவனவற்றைக் கொண்டிருப்பதுடன் ஆவணச் சான்றை விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
   (1) மேலே குறிப்பிட்டுள்ள அம்சங்களை விற்பனை செய்வதற்கான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபாரப் பதிவு.
   (2) அவர் (விலைமனுதாரர்) உற்பத்தியாளர் இல்லாவிடின், அம்சங்களை விற்பனை செய்வதற்கான எழுத்து மூலமான அதிகாரத்தை அவர் கொண்டிருத்தல் வேண்டும்.
3. விலைமனுக்கோரல் ஆவணங்களை 2024.05.07 ஆம் திகதியிலிருந்து 2024.05.26 ஆம் திகதியன்று வரையும் வேலை நேரங்களில் ஒவ்வொரு அம்சத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3500 ரூபாவை செலுத்திய பின்னர் மாத்தறை, மாவட்ட பொது வைத்தியசாலை கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
4. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு 2024.05.27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே மாத்தறை, மாவட்ட பொது வைத்தியசாலை, பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மாத்தறை**

**தொலைபேசி : 0412222261/0412227820**
**தொலைநகல் : 0412222444**
**மின்னஞ்சல் : dghmatara@yahoo.com**

---

# இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை
## (மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு)

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் நிரந்தர பதவிக்காக அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. சமூகப் பாதுகாப்பு அதிகாரி (தகவல் தொழில்நுட்பம்) - 01

A. வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் :-
(கீழ்க்காணும் தகைமைகள் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4 அல்லது 5)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தகவல் தொழில்நுட்பம் பற்றிய பட்டம் பெற்றிருத்தல்
2. பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறைக்கு பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் மத்திய இடைநிலை பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
3. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனமொன்றினால் விநியோகிக்கப்படும் தேசிய தொழில்சார் தேர்ச்சி (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்கு குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.
4. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும். தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனமொன்றினால் விநியோகிக்கப்படும் தேசிய தொழில்சார் தேர்ச்சி (NVQ) ஆறாம் (06) மட்டத்திற்கு குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   தகைமைகளைப் பெற்றுக் கொண்ட பின்பு அரச, அரச கூட்டுத்தாபனம், சபை நியதிகள் நிறுவனத்திலிருந்து குறைந்தபட்சம் குறித்த துறையில் ஐந்து வருட (05) அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
5. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழில் சார் பயிற்சி நிறுவனமொன்றினால் விநியோகிக்கப்படும் தேசிய தொழில்சார் தேர்ச்சி (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்கு குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   தகைமைகளைப் பெற்றுக் கொண்டபின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனமொன்றில் குறைந்த பட்சம் குறித்த துறையில் பத்து வருட (10) அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

B. உள்ளக விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் :-
(கீழ்க்காணும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் (MA2) சேவை வகையின் 11ம் தரத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் பதவியொன்றில் 05 வருட திருப்திகரமான சேவை காலத்தில் இருத்தல்.

**வயதெல்லை :** 22 வருடத்திற்கு குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**சம்பள முறை :** 2016.04.25ம் திகதிய 02/2016 முகாமைத்துவ சபை சுற்றுநிருபத்திற்கு அமைவாக பதவிக்குரிய சம்பள அளவு JM 1 -1 2016 ரூ. 42,000.00 - 10 x 755 - 18 x 1135 - 70,580.00 ஆகும்.

**சேர்த்து கொள்ளும் சம்பள நிலை :** ரூ. 42,600.00 ஆகும்.

**வேறு கொடுப்பனவுகள் :** அரசினால் அனுமதித்த கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள் கிடைக்கும்.

02. உள்ளக கணக்காய்வு அதிகாரி - 02

03. விசாரணை அதிகாரி - 01

A. வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் :
1. வணிகம்/ கணக்கியல் என்ற பாடத்துறையிலிருந்து பெற்றுக் கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்

B. உள்ளக விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் :
1. மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் பொருந்தும்.

**வயதெல்லை :** 22 வருடத்திற்கு குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**சம்பள முறை :** 2016.04.25ம் திகதிய 02/2016 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைவான பதவிக்கு உரிய சம்பள அளவு MA - 3 2016 ரூ. 32,200.00 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 5 x 750 - 54,960.00 ஆகும்.

**சேர்த்துக் கொள்ளும் சம்பள அளவு :** ரூ. 32,200.00 ஆகும்.

**வேறு கொடுப்பனவுகள் :** அரசினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள் உரித்தாகும்.

இப்பதவி நிரந்தரமானது. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி பங்களிப்புக்கு எரித்தாகும். மூன்று வருட நன்னடத்தை காலத்தின் பின்பு நிரந்தரமாக்கப்படும். நேர்முகப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் பதவிக்காக சேர்த்துக் கொள்ளப்படுவர். உங்களது விண்ணப்பம் மற்றும் குறித்த சான்றிதழ் பத்திரங்களை " தலைவர், இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை, இல. 18, ராஜகிரிய வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது தலைமையகத்தின் நிர்வாகப் பிரிவிற்கு 2024.05.20ம் திகதிக்கு முன்பு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். தற்போது அரச துறையில் அல்லது நியதிகள் நிறுவனங்களில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் நிறுவன தலைமையூடாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை www.ssb.gov.lk இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை,**
**"சமூகப் பாதுகாப்பு இல்லம்"**
**இல.18, ராஜகிரிய வீதி,**
**ராஜகிரிய,**
**2024.05.07**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## வட மேல் மாகாண சபை
## நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்

1. அட்டவணையில் தரப்பட்டுள்ள வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து குருநாகல், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின், திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் CIDA பதிவின் பின்வரும் தரத்தை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுடைய விலைமனுதாரர் குருநாகல், தம்புள்ளை வீதி, இல. 02, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள (NBP) ஆணையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு அதே அலுவலகத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.

   தொ. இல.: 037-2224796, 037-2220044, தொலைநகல்: 037-2224796
4. வேலை நாட்களில் 09.00 மணி மற்றும் 15.00 மணிக்கு இடையிலான காலத்தில் 2024.05.28 ஆம் திகதி வரை குருநாகல், தம்புல்லை வீதி, இல. 02, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள ஆணையாளருக்கு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தின் செல்லுபடியான ரொக்கப்பண வைப்பு ரசீது மற்றும் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
5. விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை 2024.05.29 ஆம் திகதி 11.00 மணி அல்லது அதற்கு முன்னர் முதல் மாடி, குருநாகல், தம்புல்லை வீதி, இல. 02, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் இரு பிரதிகளுடன் சேர்த்தல் வேண்டும். விலைமனுக்களை ஏற்பது மே 28 அன்று 15.00 மணிக்கு நிறைவடையும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலுள்ள முகவரியில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற பின் மூன்றாவது மாடியில் உள்ள மாநாட்டு மண்டபத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.
6. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். 05/2016(ii) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு இந்த பெறுகையின் மதிப்பிடப்படும் மொத்த செலவு 50 மில்லியனுக்கு குறைவாக இருக்கும் வரை, பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.

| விலைமனு குறியீடு இல. | ஒப்பந்தத்தின் தலைப்பு | பிரிவு | தேவையான CIDA தரம் (கட்டிடம்) | விலைமனு பிணை தொகை (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்வி கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| NWP/DPCS/ACC/05/ CON 01/RE/2024 | மீகலேவ, அமில செவன சிறுவர் இல்லத்தில் திருமணமாகாத கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பராமரிப்பு நிலையத்தில் பாதுகாப்பு வேலி மற்றும் வாயிலின் மறுசீரமைப்பு | மாஹோ | C9-C8 | 48,200.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 02/RE/2024 | மீகலேவ, அமில செவன சிறுவர் இல்லத்தில் பலகை வீட்டின் மறுசீரமைப்பு மற்றும் வாகன தரிப்பிடத்தின் கூரையை பழுதுபார்த்தல் | மாஹோ | C9-C8 | 11,880.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 03/RE/2024 | மீகலேவ, அமில செவன சிறுவர் இல்லத்தில் கழிப்பறை அமைப்புகளை பழுதுபார்த்தல் மற்றும் மற்ற கட்டாய பழுதுபார்த்தல்கள் | மாஹோ | C9-C8 | 14,000.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 04/RE/2024 | புருதகலே, விஜய கட்டுபத்த, எரோமா பெண்கள் சிறுவர் இல்லத்தில் கழிப்பறை அமைப்புகளை பழுதுபார்த்தல் | வென்னப்புவ | C8-C7 | 18,950.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 05/RE/2024 | கல்கமுவ, சியம்பலேவ, பொத்தன, பிரார்த்தனா தின பராமரிப்பு நிலையத்தில் கழிப்பறை அமைப்பை பழுதுபார்த்தல் | மாஹோ | C9-C8 | 11,800.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 06/RE/2024 | பண்டாரகம (கல்கமுவ) – சுபிபி தின பராமரிப்பு நிலைய கட்டிடத்தில் கட்டிடத்தின் மறுசீரமைப்பு | மாஹோ | C9-C8 | 9,210.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 07/RE/2024 | குளியாப்பிட்டிய, தும்மலசூரிய, புலன்கந்த – லஹிரு தின பராமரிப்பு நிலையத்தில் கட்டிடத்தின் மறுசீரமைப்பு | குளியாப்பிட்டிய | C9-C8 | 9,210.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 08/RE/2024 | ஹெட்டிபொல, திசோகம, ரன்கெட்டி தின பராமரிப்பு நிலைய கட்டிடத்தில் உட்கூரை பொருத்தல் | வாரியபொல | C9-C8 | 8,850.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 09/RE/2024 | திசோகம, கல்வெவ, சுஹந்த தின பராமரிப்பு நிலைய கட்டிடத்தில் கட்டிடத்தின் மறுசீரமைப்பு | வாரியபொல | C9-C8 | 9,450.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 10/RE/2024 | வாரியபொல – கரகஸ்வெவ ஸ்ரீ குணரத்ன தின பராமரிப்பு நிலையத்தில் தமது கைகள் மற்றும் உடல்களை கழுவுவதற்கு முடியாத சிறுவர்களுக்கு குழியலறை அமைப்பின் மறுசீரமைப்பு | வாரியபொல | C9-C8 | 6,220.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 11/RE/2024 | சிலாபம், கல்முருவ, மஹிந்த தின பராமரிப்பு நிலையத்தில் கட்டிடத்தின் மறுசீரமைப்பு | வென்னப்புவ | C9-C8 | 9,320.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 12/RE/2024 | பஹல பலல்ல (மாஹோ), தீப்தி தின பராமரிப்பு நிலையத்தில் கட்டிடத்தின் மறுசீரமைப்பு | மாஹோ | C9-C8 | 10,720.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 13/RE/2024 | அம்பன்பொல (மாஹோ), உடதியுல்வெவ, கவரதிஸ்ஸ ாராமய, தீப்தி தின பராமரிப்பு நிலையத்தில் கழிப்பறை அமைப்பை பழுதுபார்த்தல் | மாஹோ | C9-C8 | 11,700.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 14/RE/2024 | ஆனமடுவ, மகாவுஸ்வெவ, சியம்பலாவத்த, சமகி உதான தின பராமரிப்பு நிலைய நிகழ்ச்சி மேடையைச் சூழ நடைமேடையின் மறுசீரமைப்பு | புத்தளம் | C9-C8 | 9,200.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 15/RE/2024 | சேருகெலே, தாமரக்குளம, சிங்கித்தி உயன தின பராமரிப்பு நிலையத்தில் கட்டிடத்தின் மறுசீரமைப்பு | புத்தளம் | C9-C8 | 10,000.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 16/RE/2024 | கல்கமுவ – நன்னடத்தை அலுவலகத்தில் வேலியை பழுதுபார்த்தல் | மாஹோ | C9-C8 | 11,300.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 17/RE/2024 | குளியாப்பிட்டிய, ஸ்ரீபத்தி பெண் பிள்ளைகள் இல்லத்தில் வாயிலின் பழுதுபார்த்தல் மற்றும் நாகம் பூசிய உலோக வலையை பொருத்தல் | குளியாப்பிட்டிய | C9-C8 | 12,700.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 18/RE/2024 | வாரியபொல – நாவின்ன (ஆண்கள்) சிறுவர் இல்லத்தில் பாதுகாப்பு வேலியின் பழுதுபார்த்தல் (எஞ்சிய வேலை) | வாரியபொல | C9-C8 | 16,800.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 19/PSDG/2024 | மீகஹகொட்டுவ தடுப்புக்காவல் இல்லத்தில் கட்டிடத்தின் பழுதுபார்த்தல் | குளியாப்பிட்டிய | C8-C7 | 56,650.00 | 2500.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 20/PSDG/2024 | மீகஹகொட்டுவ – ப்ரோவிடன்ஸ் ஆண்கள் சிறுவர் இல்லத்தின் கட்டிடத்திற்கு வர்ணம் பூசுதல் | ரெதிகம | C9-C8 | 10,400.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 21/PSDG/2024 | மீகலேவ, அமில செவன சிறுவர் இல்லத்தில் சமையல் அறையில் இருந்து முன் பாடசாலை வரை மூடப்பட்ட நடைபாதை ஒன்றை நிர்மாணித்தல் | மாஹோ | C9-C8 | 16,400.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 22/PSDG/2024 | மீகலேவ, அமில செவன சிறுவர் இல்லத்தில் கொங்கிறீற் தொகுதிகளை வைத்தல் | மாஹோ | C9-C8 | 6,100.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 23/PSDG/2024 | பொல்கஹவெல, கிரிமுதியன்சே ஆண் சிறுவர்கள் இல்லத்தில் புதிய கழிப்பறை அமைப்பு ஒன்றை நிர்மாணித்தல் | குருநாகல் | C8-C7 | 39,200.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 24/PSDG/2024 | மீகஹகொட்டுவ பிராந்திய தடுப்புக்காவல் இல்லத்தில் புதிய கழிவுநீர் அமைப்பு (கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்) ஒன்றை நிர்மாணித்தல் | குளியாப்பிட்டிய | C8-C7 | 79,500.00 | 3500.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 26/RE/2024 | மீகலேவ, அமில செவன சிறுவர் இல்லத்தில் தோட்டத்தை மேம்படுத்தல் | மாஹோ | C9-C8 | 19,410.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 27/RE/2024 | சிலாபம் - நன்னடத்தை அலுவலகத்தில் கழிப்பறை அமைப்பை பழுதுபார்த்தல் மற்றும் அலுவலக கட்டிடத்தை மறுசீரமைத்தல் | வென்னப்புவ | C9-C8 | 8,400.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 28/RE/2024 | மீகஹகொட்டுவ பிராந்திய தடுப்புக்காவல் இல்லத்தில் காவலர் அறையை அமைத்தல் மற்றும் பாதுகாப்பு வேலியை பழுதுபார்த்தல் (எஞ்சிய வேலை) | குளியாப்பிட்டிய | C8-C7 | 31,800.00 | 2500.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 29/RE/2024 | மாரவில, சபலா பியச தின பராமரிப்பு நிலையத்தில் கழிப்பறை அமைப்பை பழுதுபார்த்தல் | வென்னப்புவ | C9-C8 | 7,600.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 30/RE/2024 | அடிகம – லங்கா ப்ரூகே சிறுவர் இல்லத்தில் (பெண்கள்) சமையலறையை மறுசீரமைத்தல் | புத்தளம் | C8-C7 | 22,300.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 31/RE/2024 | ஹெட்டிபொல – கல்கந்த முதித சிறுவர் இல்லத்தின் கட்டிடங்களுக்கு வர்ணம் பூசுதல் | வாரியபொல | C9-C8 | 12,000.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 32/RE/2024 | மாஹோ – நன்னடத்தை அலுவலகத்தில் வேலியை பழுதுபார்த்தல் மற்றும் அலுவலக கட்டிடத்திற்கு வர்ணம் பூசுதல், மோட்டார் சைக்கிள் தரிப்பிடத்தை பழுதுபார்த்தல் | மாஹோ | C9-C8 | 18,200.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 33/RE/2024 | இப்பாகமுவ, முருதவ, முருதவ விஷாக்கா தின பராமரிப்பு நிலையத்தில் கதவுகள் மற்றும் ஜன்னல்களை பழுதுபார்த்தல் | ரெதிகம | C9-C8 | 4,650.00 | 2000.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 34/RE/2024 | தும்மலதெனிய பெண் பிள்ளைகள் இல்லத்தின் கட்டாய பழுதுபார்த்தல்கள் | வென்னப்புவ | C8-C7 | 46,200.00 | 2500.00 |
| NWP/DPCS/ACC/05/ CON 35/RE/2024 | தம்பரகலே, நல்லதரன்கட்டுவ, எரோம ஆண் சிறுவர் இல்லத்தில் கழிப்பறை அமைப்புகளை பழுதுபார்த்தல் | வென்னப்புவ | C9-C8 | 20,010.00 | 2000.00 |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் (NBP)**
**குருநாகல்**

## விலைமனுக்களுக்கான வேண்டுகோள் (RFB) - வேலைகள்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

நீர்ப்பாசன அமைச்சு

# நீர்ப்பாசனத் திணைக்களம்

### காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அனுகுமுறை

செயற்றிட்ட அடையாளம் - P 160005 / கடன் இலக்கம்: IBRD-89960

## தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல்

**விலைக்கோரல் இலக்கம்: CResMPA-1/RP/WORKS/ID-MON/NCB/069, 071,073, 074, 075, 090, 093, 095, 102, 103, 105, 106, 107**

1. காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை (CResMPA) கிரயச் செலவிற்காக மீள் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (IBRD) கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது என்பதுடன் இந்தக் கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தவுள்ளது. தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.

2. மொனராகலை மாவட்டத்தினுள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மொனராகலை - நீர்ப்பாசனப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த பொதி இலக்கம் | வேலையின் பெயர் | முடிவுறுத்தும் காலம் (நாட்கள்) | ICTAD (ஆகக் குறைந்த தரம்) நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால மைப்பின் கீழ் | விலைக்கோரல் பிணை முறி | | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) | வருடாந்த நிர்மாணப் புரள்வு (இல. ரூபா மில்லியன்) | நிதி வளம் (இல. ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை (இல. ரூபா) | காலப் பகுதி (நாட்கள்) | | | |
| CResMPA-1/RP/ WORKS/ ID-MON/ NCB/069 | தெமலிய திட்டத்திலுள்ள FC கால்வாய், அணைக்கட்டு வீதியை புனரமைத்தல் | 5 | C6 | 260,000.00 | 10.09.2024 | 77 | 26.00 | 11.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-MON/ NCB/071 | நாகலயில் உள்ள நாகல மகா வெவ மற்றும் குடா வெவ என்பவற்றை மேம்படுத்துதல் | 6 | C6 | 334,000.00 | 10.09.2024 | 77 | 34.00 | 12.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-MON/ NCB/073 | படியாவையில் உள்ள பெடிவெவ கால்வாய் முறைமையைப் புனரமைத்தல் | 6 | C6 | 185,000.00 | 10.09.2024 | 77 | 19.00 | 7.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-MON/ NCB/074 | மொனரவெவ LBMCஇல் உள்ள 2+400 முதல் 4+200 வரை புனரமைத்தல் | 5 | C6 | 155,000.00 | 10.09.2024 | 77 | 16.00 | 7.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID- MON/ NCB/075 | ஹந்தபானகல RBMC இன் Syphone கட்டமைப்பின் மேம்படுத்தல்கள் | 6 | C7 | 104,000.00 | 10.09.2024 | 77 | 11.00 | 4.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-MON/ NCB/090 | ஹம்பேகமுவ LBMCஇன் இறுதி முடிவின் மேம்படுத்தல்கள் | 5 | C7 | 112,200.00 | 10.09.2024 | 77 | 12.00 | 5.00 |
| CResMPA-1/ RP/ WORKS/ ID-MON/ NCB/093 | LBMCஇன் மடிப்பளம்முள்ள D கால்வாயின் மேம்படுத்தல்கள் | 4 | C7 | 130,000.00 | 10.09.2024 | 77 | 13.00 | 7.00 |
| CResMPA-1/ RP/ WORKS/ ID-MON/ NCB/095 | LBMCஇல் 3+290 முதல் 3+360 வரை கால்வாய் லைனிங் நிர்மாணித்தல் | 4 | C7 | 84,000.00 | 10.09.2024 | 77 | 9.00 | 5.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-MON/ NCB/102 | யுதகனாவ திட்டத்திலுள்ள பிரதான கால்வாயை புனரமைத்தல் | 6 | C6 | 327,000.00 | 10.09.2024 | 77 | 33.00 | 11.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-MON/ NCB/103 | யுதகனாவ திட்டத்திலுள்ள விநியோகக் கால்வாய் மற்றும் வயற் கால்வாய்களை புனரமைத்தல் | 6 | C5 | 380,000.00 | 22.10.2024 | 119 | 38.00 | 13.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-MON/ NCB/105 | அலுகல்ல குளத்தின் Spill Pathway இன் மேம்படுத்தல்கள் | 6 | C6 | 165,100.00 | 10.09.2024 | 77 | 17.00 | 6.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-MON/ NCB/106 | அக்குரெஸ்ஸ ஊட்டக் கால்வாயின் மேம்படுத்தல்கள் | 6 | C7 | 75,000.00 | 10.09.2024 | 77 | 9.00 | 3.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-MON/ NCB/107 | அக்குரெஸ்ஸ கால்வாய் முறைமையின் மேம்படுத்தல்கள் | 6 | C7 | 105,000.00 | 10.09.2024 | 77 | 11.00 | 4.00 |

3. தகைமைத் தேவைப்பாடுகள்: விலைமனுதாரர் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளார் என ஆவணரீதியாக விளங்கப்படுத்துதல் வேண்டும்.
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பில் விசேடத்துவமாக ஆகக் குறைந்த ICTAD/CIDA செல்லுபடியாகும் தரப் பதிவு.
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கடந்த ஐந்து (05) வருடங்களினுள் ஆகக்குறைந்த சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு.
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தம்வசமுள்ள நிதி வளம் அல்லது கிடைக்கும் வழிகளை விலைமனுதாரர் விளங்கப்படுத்துதல் வேண்டும்.
   - பொதுவான அனுபவம் - கடந்த ஐந்து (05) வருடங்களினுள் ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரர் பாத்திரத்தின் கீழான அனுபவம்.
   - விசேடத்துவ அனுபவம் - கடந்த பத்து (10) வருடங்களில் வெற்றிகரமாகவும், கணிசமாக நிறைவுசெய்யப்பட்ட குறைந்தபட்சம் இதனையொத்த இயல்பைக் கொண்ட ஒரு (01) ஒப்பந்தத்திலாவது ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக பங்குபற்றியிருத்தல்.
   - கடந்த பத்து (10) வருடங்களில் நீர்ப்பாசன கால்வாய்களின் மண் வேலைகள் மற்றும் நிர்மாணம் அல்லது கால்வாய் கட்டமைப்பு திருத்தவேலைகளில் முக்கிய செயற்பாட்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
4. IPF கடன் வாங்குபவர்களுக்கான உலக வங்கியின் 2020 பெறுகை ஒழுங்குவிதிகளின் 04வது பதிப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளுக்கமைவாக பொருட்கள், வேலைகள், ஆலோசனை அல்லாத மற்றும் ஆலோசனை சேவைக்கான பெறுகையின் பிரகாரம் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைக்கோரல்கள் இடம்பெறும் என்பதுடன் பெறுகை வழிகாட்டியில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களுக்கு இது திறந்திருக்கும். மேலதிகமாக உலக வங்கியின் ஆர்வ முரண்பாட்டு கொள்கையின் 1.6 மற்றும் 1.7 பந்திகளை தயவு செய்து பார்க்கவும்.
5. விலைமனுதாரர்கள் 2024-05-08ஆம் திகதி முதல் 2024-05-27ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் (மு.ப. 9.30 மற்றும் பி.ப. 2.30 மணிக்கிடையில்) ஒவ்வொரு தொகுதிக்கும் 075,090,093,095,106,107 ஒப்பந்தப் பொதிகளுக்காக 3,500.00 இலங்கை ரூபா மற்றும் 073,074,105 ஒப்பந்தப் பொதிகளுக்காக 4,000.00 இலங்கை ரூபா மற்றும் 069ஆம் பொதிக்காக 5,000.00 இலங்கை ரூபா மற்றும் 071, 102, 103 ஒப்பந்தப் பொதிகளுக்காக 6,000.00 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் மொனராகலை, ஹுலந்தாவ சந்தி, நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து (மொனராகலை) ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் விரும்பினால் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் அவற்றை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து (மொனராகலை) பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: **0552276018.**
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-05-20ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு மொனராகலை, நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும். வளமுள்ள விலைமனுதாரர்கள் 2024-05-20ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு பின்வரும் அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.

| ஒப்பந்த இல. **(CResMPA-1/RP/ WORKS/ID-MON…….)** | அதிகாரியின் பெயர் | தொடர்பிலக்கம் |
|---|---|---|
| NCB/069, NCB/075, NCB/105, NCB106, NCB107 | பொறி. R.P.N.C. சேனாரத்ன | 0719361010 |
| NCB/071, NCB073, NCB074, NCB093, NCB095 | பொறி. B. சுபராஜ் | 0713391183 |
| NCB/102, NCB/103 | பொறி. R.S. சுதுசிங்க | 0707302415 |
| NCB/090 | பொறி. P.D.T. குணதிலக்க | 0713807006 |

8. 2024-05-28ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது மொனராகலை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2024-05-28ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மொனராகலை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. சகல பொதிகளுக்கும் அல்லது பட்டியலில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பொதிகளுக்காக விலைமனுதாரர்கள் சுதந்திரமாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும் பல பொதிகளுக்காக தகுதியைப் பெறும் பட்சத்தில், மிகவும் சாதகமான பொருளாதார நன்மைகளைக் கவனத்திற்கொண்டு ஒரு விலைமனுதாரருக்கு வழங்கப்படும் பொதிகளின் எண்ணிக்கையை தொழில்வழங்குநர் தீர்மானிப்பார்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**ஹுலந்தாவ சந்தி,**
**மொனராகலை.**

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''(ஒப்பந்த இலக்கம்) என்பதற்கான விலைமனு'' என தயவு செய்து எழுதவும்.

சகல விலைமனுக்களுடனும் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்திற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொறி. A.K. அப்துல் ஜப்பார்,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**ஹுலந்தாவ சந்தி,**
**மொனராகலை.**

திகதி: 2024-05-07.

---

### இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான பெறுகை – 2024/2025

போக்குவரத்து சேவைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் சார்பாக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களுடன் விண்ணப்பிக்கலாம்.

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தக் காலமானது ஒரு வருடமாகும். (365 நாட்கள்)
3. தகுதியுள்ள விலைமனுதாரர் எந்தவொரு அரச நிறுவனத்தினாலும் தகுதி நீக்கப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. போக்குவரத்து சேவையை வழங்குவதற்கான ஒரு கம்பனி அல்லது ஒரு தனிநபர் அமைப்பாகவிருப்பதற்கான பதிவுச் சான்றிதழை விலைமனுதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் ஒரு வருடத்திற்கு குறையாத அரச துறை அல்லது வேறேதாவது அரச கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் திருப்திகரமான போக்குவரத்து சேவை ஒப்பந்த பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. 2024.05.07 ஆம் திகதியிலிருந்து 2024.05.28 ஆம் திகதி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை (இரண்டாயிரம் ரூபாவை மாத்திரம்) வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவக காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் பெயரில் இலங்கை வங்கி கூட்டுரு கிளையிலுள்ள 7120156 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்பட்ட பணப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றை சமர்ப்பித்தலின் பின்னர் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
6. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் அடக்கப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் ''Hire of Vehicles 2024/2025'' என குறிப்பிடப்பட்டு 2024.05.28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் "The Chairman, Department Procurement Committee, Sri Lanka Institute of Tourism & Hotel Management, No. 78, Galle Road, Colombo-3" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 1 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
7. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. இது தொடர்பான மேலதிக தகவலை இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இல.: 011 2208300)
9. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகுமென்பதுடன் அலுவலர்களிடமிருந்து ஆதரவு தேடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.
10. விலைமனுக்கோரல் தரவில் வழங்கப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப் பிணையுடன் ஒவ்வொரு விலைமனுவும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்.**

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

# இலங்கை சிறைச்சாலைத் தலைமையகம்

### வேலிக்கட சிறைச்சாலையின் சமையலறை கூரையின் புதுப்பித்தல் வேலை

**ஒப்பந்த இல.: சிறை/ நிர்/வெலிக்கட/கேள்வி/2001/2023**

1. வெலிக்கட சிறையின் சமையலறை கூரையின் புதுப்பித்தல் வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சிறைச்சாலை தலைமையகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார். செயற்றிட்ட முழுவதற்குமான மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சராசரி செலவானது அண்ணளவாக 11.4 மில்லியன் ரூபாவென்பதுடன் இத்தொகையானது இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டுள்ளது. புதுப்பித்தல் கால எல்லையானது 120 நாட்காட்டி நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. அனைத்து விலைமனுதாரர்களும் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்துடன் கீழே வழங்கப்பட்டுள்ள தரம் மற்றும் விஷேடத்துவத்தின் கீழ் பதிவு பெற்றிருப்பதுடன் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையிலும் ஒப்பந்தத்தை வழங்கும் வேளையிலும் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவுமிருத்தல் வேண்டும்.

   **தேவைப்படும் ICTAD/CIDA பதிவு செய்தல்.**
   விஷேடத்துவம் : கட்டிடம்
   தரம் : சி-6 மற்றும் சி-5
4. விலைமனுக்கள் 2024.05.28 ஆம் திகதியிலிருந்து 2024.08.13 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. விலைமனுவானது 114,000 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. விலைமனுப் பிணையானது 2024.05.28 ஆம் திகதியிலிருந்து 2024.09.10 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. தளவிஜயமானது 2024.05.14 ஆம் திகதியன்று நடைபெறும்.
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2024.05.28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகும்.
9. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் மூடும் திகதிக்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே பணிப்பாளர், பொறியியல் பிரிவு,சிறைச்சாலைத் தலைமையகம், இல.: 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு-09 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.(தொடர்பிலக்கம்: 0114677126)
10. விலைமனுக்கள் இரு பிரதிகளில் தலைவர், பெறுகைக் குழு, சிறைச்சாலைத் தலைமையகம், இல.: 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு-09 என்ற முகவரியில் விலைமனுக்களை மூடும் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமான கடிதத்துடன் சமுகமளிக்கும் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
11. 2024.05.07 ஆம் திகதியிலிருந்து 2024.05.28 ஆம் திகதியன்று வரையும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான 3,200 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-09, பேஸ்லைன் வீதி, 150 ஆம் இலக்கத்திலுள்ள சிறைச்சாலைத் திணைக்கள பொறியியல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
12. 2024.05.28 ஆம் திகதியிலிருந்து 2024.09.10 ஆம் திகதி வரையும் நிபந்தனையற்ற விலைமனுப்பிணையொன்றுடன் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். இந்த பிணையானது வங்கி உத்தரவாத பாங்கிலமைந்ததாகவும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.
13. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-09, பேஸ்லைன் வீதி, 150 ஆம் இலக்கத்திலுள்ள சிறைச்சாலைத் தலைமையக பொறியியல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (0114677126- பணிப்பாளர் - பொறியியலாளர் - (cov))
14. திணைக்கள பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமே பெறுகைக்கான இறுதி தீர்மானமாக கருதப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சிறைச்சாலைத் தலைமையகம்,**
**இல.: 150, பேஸ்லைன் வீதி,**
**கொழும்பு-09.**

The Housewives' companion
Classifieds on
Daily News

தினகரன் விளையாட்டு

sports.tkn@lakehouse.lk

2024 மே 7 செவ்வாய்க்கிழமை

## வின்னர்ஸ் குளோபல் வெற்றி



கூட்டண்மை நிறுவன அணிகளுக்கு இடையில் Rainbow Pages நலன்புரி சங்கம் ஏற்பாடு செய்த மென்பந்து கிரிக்கெட் தொடரில் வின்னர்ஸ் குளோபல் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

பத்தரமுல்லை ஜி.எச். புத்திதாச மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்த தொடரில் 28 அணிகள் பங்கேற்றன. சம்பியன் கிண்ணம் வென்ற அணி 200,000 பணப் பரிசையும் வென்றது.

பரிசளிப்பு நிகழ்வில் தி சான்ஸ் ஸ்போட்ஸின் முகாமைத்துவ பணிப்பாளர் லசந்த அமரசிங்க, நுகேகொட ஏ.டி. ஸ்போட்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர்களான ஆனந்த மற்றும் திருமதி வசந்தி, எஸ்.எல்.டீ. (சர்விசஸ்) லிமிடெட் பிரதம அதிகாரி (டிஜிட்டல் சேவைகள்) உபுல் மஞ்சநாயக்க மற்றும் பிரதம செயற்பாட்டு அதிகாரி அசேல கலப்பத்திகே ஆகியோர் பங்கேற்றனர்.

# டி20 உலகக் கிண்ணத்திற்கு இலங்கை மகளிர் முன்னேற்றம்

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான மகளிர் டி20 உலகக் கிண்ண தகுதிகாண் அரையிறுதிப் போட்டியில் 15 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இலங்கை மகளிர் அணி மகளிர் டி20 உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்றது.




அபூதாபியில் நேற்று முன்தினம் (05) நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை மகளிர் அணி 20 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 149 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீராங்கனை விஷ்மி குணரத்ன 45 ஓட்டங்களை பெற்றார்.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய ஐக்கிய அரபு இராச்சிய மகளிர் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களையே பெற்றது. பந்துவீச்சில் அணித் தலைவி சமரி அத்தபத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி இன்று (7) நடைபெறும் உலகக் கிண்ணத் தகுதிகாண் இறுதிப் போட்டியில் இலங்கை, ஸ்கொட்லாந்து மகளிர் அணியை எதிர்கொள்ளவுள்ளது. ஸ்கொட்லாந்து அணி அரையிறுதியில் அயர்லாந்தை 8 விக்கெட்டுகளால் வீழ்த்தி மகளிர் டி20 உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்றது.

மகளிர் டி20 உலகக் கிண்ணம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ளது.



மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ண போட்டியில் பங்கேற்கும் இலங்கை அணியினரை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சந்தித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

## கிழக்கு மாகாண போட்டிக்கு அட்டாளைச்சேனை தகுதி

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக அணி வெற்றி பெற்று அம்பாறை மாவட்ட சம்பியனாகி கிழக்கு மாகாண போட்டியில் விளையாட தகுதி பெற்றது.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை (03) நடைபெற்ற இறுதி போட்டியில் திருக்கோவில் பிரதேச செயலக அணியினர் 10 ஓவர் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 63 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அட்டாளைச்சேனை பிரதேச செயலக அணி 9.4 ஓவர் நிறைவில் 6 விக்கெட் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்களினால் வெற்றி பெற்று கிழக்கு மாகாண போட்டியில் விளையாட தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்



# படை நடவடிக்கையை ஒட்டி ரபாவில் இருந்து பலஸ்தீனர்களை வெளியேற இஸ்ரேல் உத்தரவு

## போர் பதற்றம் அதிகரிப்பு: பேச்சுவார்த்தையில் பின்னடைவு

ஒரு மில்லியனுக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் காசாவின் தெற்கு நகரான ராபாவில் இருந்து மக்களை வெளியேறும் உத்தரவை இஸ்ரேல் நேற்று (06) பிறப்பித்துள்ளது. நீண்ட காலமாக எச்சரித்து வரும் அந்த நகர் மீதான படை நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகும் வகையிலேயே இந்த வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

20 கிலோமீற்றருக்கு அப்பால் இருக்கும் 'விரிவுபடுத்தப்பட்ட மனிதாபிமான வலயம்' ஒன்றுக்கு செல்லும்படி பலஸ்தீன மக்களுக்கு அரபு மொழியிலான குறுஞ்செய்திகள், தொலைபேசி அழைப்புகள் மற்றும் வானில் இருந்து வீசிய துண்டு பிரசுரங்கள் மூலம் இஸ்ரேல் இராணுவம் அறிவுறுத்தியுள்ளது. இதனையடுத்து சில பலஸ்தீன குடும்பங்கள் மழை மற்றும் குளிருக்கு மத்தில் வெளியேறிச் செல்வதை காண முடிந்ததாக பார்த்தவர்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

ரபாவில் உள்ள குடியிருப்பாளர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளியேறுவதற்கு ஊக்குவிப்பதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. எனினும் குறிப்பிட்ட காரணத்தையோ, படை நடவடிக்கை ஒன்று பற்றியோ அது விளக்கவில்லை.

போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் முறிவடையும் நெருங்கடியில் இருப்பதோடு, ஹமாஸ் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டதை அடுத்து ரபாவில் இஸ்ரேல் நேற்று கடும் தாக்குதலை நடத்திய சூழலிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காசா போர் இன்றுடன் ஏழு மாதங்களை தொடும் நிலையில் ரபா மீதான படையெடுப்பு தொடர்பில் இஸ்ரேல் அண்மைக் காலமாக கடுமையாக எச்சரித்து வருகிறது. காசாவில் இஸ்ரேலிய தரைப்படை இன்னும் நுழையாத பகுதியாக இருக்கும் ரபாவில் ஆயிரக்கணக்கான ஹமாஸ் போராளிகள் மற்றும் பல பணயக்கைதிகளும் இருப்பதாக இஸ்ரேல் சந்தேகம் வெளியிட்டு வருகிறது. ரபாவை கைப்பற்றாது காசாவில் வெற்றி சாத்தியம் இல்லை என்று இஸ்ரேல் கூறுகிறது. ரபா மீதான படை நடவடிக்கை பாரிய உயிர்ச்சேதங்களுக்கு காரணமாகக் கூடும் என்று இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா உட்பட மேற்குல நாடுகளும் கவலை வெளியிட்டு வருகின்றன. ரபா எல்லையை பகிர்ந்து கொண்டிருக்கும் எகிப்தும் இது பற்றி பெரும் கவலை அடைந்திருப்பதோடு புதிய போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையை தீவிரப்படுத்தியுள்ளது.

### 100,000 பேரை வெளியேற்ற திட்டம்

ரபா மீதான இஸ்ரேலின் திட்டம் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இடையே வெளிப்படையான முறுகலுக்கு காரணமாகி உள்ளது. அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்டினுடன் நேற்று தொலைபேசியில் பேசிய இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட், 'ரபாவை தாக்குவதைத் தவிர இஸ்ரேலுக்கு வேறு வழியில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

'இருவருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின்போது, பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு முன்னெடுக்கும் முயற்சிகள் தொடர்பிலும் தற்போதைய நிலையில் முன்வைக்கும் திட்டத்தை ஹமாஸ் மறுக்கிறது என்றும் கல்லன்ட் குறிப்பிட்டார்' என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரபாவின் கிழக்கு பகுதியில் உள்ள பலஸ்தீனர்களையே அருகில் இருக்கும் 'மனிதாபிமான பகுதிக்கு' வெளியேறும்படி இஸ்ரேல் இராணுவம் நேற்று (07) உத்தரவிட்டது. குறிப்பிட்ட பகுதிக்கு பொதுமக்கள் படிப்படியாக செல்வதை ஊக்குவிப்பதாகவும் அது கூறியது.

இதில் ரபாவின் சில புறமாவட்டங்கள் அவதானம் செலுத்தப்பட்டிருப்பதாகவும் இங்கிருந்து வெளியேறுபவர்கள் அருகில் கான் யூனிஸ் மற்றும் அல் முவாசியில் உள்ள கூடாரங்களுக்கு நேரடியாக அனுப்பப்படுவார்கள் என்றும் இஸ்ரேலிய இராணுவ வானொலி தெரிவித்துள்ளது.

இலக்கு வைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமது வீடுகளில் இருந்து வெளியேறும்படி தொலைபேசி அழைப்பு கிடைத்ததாக ரபா குடியிருப்பாளர்கள் பலர் தெரிவித்துள்ளனர். அதேபோன்று கிழக்கு ரபாவில் இஸ்ரேல் சிவப்பு நிறத்திலான துண்டுப் பிரசுரங்களையும் வானில் இருந்து வீசியுள்ளது. அதில் முவாசிக்கு செல்லும்படியும் இந்த இடம்



பெயர்வு தற்காலிகமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'தற்போது ரபா முகாம், பிரேசில் முகாம் மற்றும் அண்டைய அல் ஷபுரா மற்றும் அல் சொஹோர் பகுதிகளில் அடைக்கலம் பெற்றிருக்கும் அனைத்து குடியிருப்பாளர்களும் இங்கு தொடர்ந்து தங்குவது உயிராபத்து மிக்கது' என்று அந்த துண்டு பிரசுரத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ரபாவில் அடைக்கலம் பெற்றிருக்கும் இரு குழந்தைகளின் தாயான காதா எல் குர்த் கடந்த நான்கு மாதங்களில் ஆறு தடவைகள் இடம்பெயர்ந்து ரபாவை அடைந்துள்ளார். இஸ்ரேலின் புதிய வெளியேற்ற உத்தரவுக்கு மத்தியிலும் தொடர்ந்து அங்கேயே தங்கி இருக்கப் போவதாக பி.பி.சி. வானொலிக்கு அவர் தெரிவித்துள்ளார்.

'உண்மையில் நான் பெரும் குழப்பத்தில் இருக்கிறேன். எனக்கு போவதற்கு எந்த இடமும் இல்லை. இது தான் கடைசி இடம்' என்றார். இஸ்ரேல் குறிப்பிட்டிருக்கும் கூடாரங்கள் பாதுகாப்பானதா என்பது குறித்து தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

'இங்கே கடுமையாக மழை பெய்கிறது. எங்கே போவதென்று எமக்குத் தெரியவில்லை. இந்த நாளுக்காக நான் கவலைப்பட்டு வந்தேன். எனது குடும்பத்தை எங்கே அழைத்துச் செல்வது என்பது பற்றி நான் தற்போது அவதானம் செலுத்தி வருகிறேன்' என்று ரபாவைச் சேர்ந்த மற்றொரு அகதியான அபூ ரயித் தெரிவித்தார்.

ரபாவில் இருந்து சுமார் 100,000 மக்களை வெளியேற்றப்போவதாக இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இஸ்ரேலின் தாக்குதல் மேலும் பலஸ்தீன மக்களின் உயிரிழப்புகள் மற்றும் வேதனைகளுக்கே வழிவகுக்கும் என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் சமூகதளத்தில் எச்சரித்துள்ளது.

மறுபுறம் ரபாவில் இருந்து மக்களை வெளியேற்றும் இஸ்ரேலின் உத்தரவு அபாயகரமானது என்றும் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் ஹமாஸ் அமைப்பின் மூத்த அதிகாரியான சமி அபூ சுஹ்ரி, ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

போருக்கு முன்னர் 270,000 மக்கள் தொகை கொண்ட ரபாவில் தற்போது 1.2 மில்லியன் மக்கள் அடைக்கலம் பெற்றிருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் தரைவழி தாக்குதலில் வடக்கும் மற்றும் மத்திய காசாவில் இருந்து மக்கள் வெளியேறிய நிலையில் இங்கு தற்போது 1.5 மில்லியன் பேர் சிக்கி இருப்பதாக எல்லைகள் அற்ற மருத்துவர்கள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

### போர் நிறுத்த பேச்சிலும் குழப்பம்

ரபாவில் கடந்த ஞாயிறு இரவு தொடக்கம் 11 வீடுகளை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய கடுமையான தாக்குதலில் எட்டு சிறுவர்கள் உட்பட குறைந்தது 22 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட நிலையிலேயே நேற்று இந்த வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ரபாவின் கிழக்கு பகுதியில் உள்ள அபூ லப்தா குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரு சிறுவர்கள் உட்பட நால்வர் கொல்லப்பட்டதோடு, ரபாவில் அல் சலம் பகுதியில் உள்ள குயிஷ்தா குடும்ப வீட்டை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு சிறுவர்கள் உட்பட 9 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

ரபாவின் கிழக்கில் ஜோர்ஜ் வீதியில் உள்ள வீடு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் வீசிய குண்டுகளில் ஒரு சிசு உட்பட நால்வர் கொல்லப்பட்டதாகவும் அந்த செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. ரபா மீது இஸ்ரேல் இராணுவம் அண்மைய நாட்களில் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருந்த நிலையில் இந்தத் தாக்குதல்கள் அதிக உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நிலையில் ரபா நகருக்கு அருகில் ஹமாஸ் ஆயுதப் பிரிவு நடத்திய ரொக்கெட் தாக்குதல்களில் நான்கு இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டுள்ளனர். கெரெம் ஷலொம் எல்லைக் கடவையின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது ரபாவில் இருந்து பத்து ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டது.

இதனை அடுத்து காசாவுக்கான உதவிகள் செல்லும் அந்த எல்லைக்கடவையை இஸ்ரேல் மூடியுள்ளது.

இந்த தாக்குதல் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் புதிய பேச்சுவார்த்தையிலும் நிச்சயமற்ற சூழலை ஏற்படுத்தியுள்ளது. பணயக்கைதிகள் சிலரை விடுவிக்கும் காசா போர் நிறுத்தம் ஒன்றுக்கான முன்மொழிவை ஹமாஸ் மறுப்பதன் காரணமாக ரபா போர் நடவடிக்கை அவசியமாகி உள்ளது என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் கல்லன்ட் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

கெய்ரோவில் இடம்பெற்ற புதிய சுற்று பேச்சுவார்த்தையில் எந்த உடன்படும் எட்டப்படாத நிலையில் ஆலோசனை பெறுவதற்காக ஹமாஸ் பிரிதிநிதிகள் குழு டோஹா பயணித்திருப்பதாக ஹமாஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மறுபுறம் அவசர பேச்சுவார்த்தை ஒன்றுக்காக அமெரிக்க உளவுப் பிரிவான ஐ.சி.ஏ. பணிப்பாளர் பில் பேர்ன்ஸும் நேற்று கட்டார் விரைந்தார். அவர் கட்டார் பிரதமர் ஷெய்க் முஹமது பின் அப்துல்ரஹ்மான் பின் ஜசீம் அல்தானியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவிருப்பாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவருவதாகவே எந்த ஒரு உடன்படிக்கையும் அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஹமாஸ் உறுதியாக உள்ளது. முழுமையான போர் நிறுத்தத்தை நிராகரிக்கும் இஸ்ரேல் பணயக்கைதிகளை விடுவிக்கும் வகையில் போர் நிறுத்தம் ஒன்றையே வலியுறுத்தி வருகிறது.

இஸ்ரேல் மீது கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலில் சுமார் 250 பணயக்கைதிகள் பிடிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து சுமார் 130 பணயக்கைதிகள் காசாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

காசா மீது இஸ்ரேல் கடந்த ஏழு மாதங்களாக இடைவிடாது நடத்தும் தாக்குதல்களில் 34,600க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அல் ஜசீராவுக்கு இஸ்ரேலில் பூட்டு

ஹமாஸின் ஊதுகுழல் என்று இஸ்ரேல் குற்றம்சாட்டிய அல் ஜசீரா தொலைக்காட்டிசி சேவையை மூடும் நடவடிக்கையை இஸ்ரேலிய அரசு முன்னெடுத்துள்ளது.

காசா போருக்கு மத்தியில் அந்த தொலைக்காட்சி சேவையை மூடுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்ததாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். ஜெரூசலத்தின் அம்பசிடர் ஹோட்டலில் உள்ள அந்த கட்டார் ஒளிபரப்பு சேவை அலுவலகத்தில் பொலிஸார் நேற்று முன்தினம் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.




தமது சேவை இஸ்ரேல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறப்படுவது 'அபாயகரமான மற்றும் அபத்தமான பொய்' என்று அல் ஜசீரா குறிப்பிட்டுள்ளது. இதற்கு எதிராக அனைத்து சட்ட நடவடிக்கைகளை எடுக்க உரிமை இருப்பதாகவும் அது தெரிவித்துள்ளது.

சுற்றிவளைப்பின்போது உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக இஸ்ரேல் தொடர்பாடல் அமைச்சர் ஷ்லோமோ கார்ஹி தெரிவித்துள்ளார்.

அரசின் முடிவுக்கு அமைய அல் ஜசீரா ஒளிபரப்பு சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்று இஸ்ரேலிய செய்மதி சேவையான யெஸ், குறிப்பிட்டுள்ளது. எனினும் இஸ்ரேலில் பேஸ்புக் வழியாக தொடர்ந்தும் அல் ஜசீரா ஒளிபரப்பை பார்க்க முடியுமாக உள்ளது.

## புலம்பெயர்ந்தவர்கள் ஆப்கான் திரும்பினர்



பாகிஸ்தான் மற்றும் ஈரானால் திருப்பி அனுப்பப்பட்ட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆப்கானிய புலம்பெயர்வாளர்கள் நாட்டுக்கு திரும்பி வந்துள்ளதாக தலிபான்கள் அரசின் அகதிகள் மற்றும் திருப்பி அனுப்பப்படுபவர்கள் தொடர்பான அமைச்சு தெரிவித்துள்ளது.

ஈரானில் இருந்து 2368 ஆப்கானிய புலம்பெயர்வாளர்களும் பாகிஸ்தானில் இருந்து 260 ஆப்கானிய புலம்பெயர்வாளர்களும் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பாகிஸ்தானிலுள்ள ஆப்கானிய புலம்பெயர்வாளர்களின் பிரச்சினைக்கு இரு தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஊடாக தீர்வு காண முன்வருமாறு ஆப்கானிய அகதிகள் விவகார அமைச்சர், பாகிஸ்தானிடம் கேட்டுக்கொண்டுள்ளார். அத்தோடு ஆப்கானிய புலம்பெயர்வாளர்களை வெளியேற்றும் நடவடிக்கையை நிறுத்துமாறு சர்வதேச மன்னிப்பு சபையும் பாகிஸ்தானிடம் கேட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.